# பேணுதர் சர்மா

பிரஃபுல்லா கொடோகி

T
891.450 924
Sh 23 K

இந்தி
இல
சிற்

T
891.450924
Sh 23 K.







உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

[நாகார்ஜுன மலைச் சிற்பம் — கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
படம் உதவி: நேஷனல் மியூஸியம், புதுதில்லி.]

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# பேணுதர் சர்மா

மூலம்:

பிரஃபுல்லா கொடோகி

தமிழாக்கம்

ஏ.எஸ். இளங்கோவன்

சாகித்திய அக்காதெமி

*Benudhar Sharma* - Tamil translation by A.S. Ilangovan of Prafulla Kotoky's monograph on Benudhar Sharma, Sahitya Akademi New Delhi - 1994

**ISBN – 81 – 7201 – 651 – 4**

© Sahitya Akademi

First Published 1994

T
891.450 924
Sh. 23 K

Library IIAS, Shimla
T 891.450 924 Sh 23 K
00117388

**சாகித்திய அக்காதெமி**
இரவிந்திர பவன், 35, பெரோஸ் ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை
'சுவாதி' மந்திர் சாலை, புதுதில்லி–110 001.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா சாலை,
தாதர், பம்பாய்–400 014.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா–700 053.

ஏ.டி.ஏ. ரங்கமந்திர, 109 ஜெ.ஸி. ரோடு, பெங்களூர்–560 002.

'குணா பில்டிங்', 304–305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை–600 018.

Indian I... ...ance
117388
14/12/94
SHIMLA

விலை: ரூ. 15/–

Laser Typesetting at M/s. Type Shop, Bangalore

***Printed at Elegant Printing Works, Bangalore***

உள்ளடக்கம்

1. வாழ்வும் இலக்கியப் பணியும் ........................ 7

2. குழந்தை இலக்கியம் ........................ 13

3. வாழ்க்கை வரலாறுகள் ........................ 17

4. பலவகை உரைநடைப் படைப்புகள் ........................ 25

5. வரலாற்றுப் படைப்புகள் ........................ 27

6. நினைவுக் குறிப்புகளும் தன் வரலாறும் ........................ 41

7. மொழிபெயர்ப்புகள், இலக்கியத்திறனாய்வுகள் ........................ 49

8. நடைநய வல்லுநர் ........................ 50

9. நிறைவுரை ........................ 52

நூற் பட்டியல் ........................ 53

# 1

# வாழ்வும் இலக்கியப் பணியும்

பேணுதர் சர்மா [1894—1981] அஸ்ஸாமிய இலக்கியத்தில் மிக மிகப் போற்றப்பட்ட இலக்கிய வாதிகளில் ஒருவர். இலக்கியப் படைப்பாளி என்னும் முறையில் அவர் பல்வேறு துறைகளில் பெருமைபெற்று விளங்கினார். மரபுத்தொடர்கள் மிடைந்த தனித்தன்மையான, பிறர் எடுத்தாளுதற்கரிய, நடைநலம் மிக்க உரைநடை அவருடைய தனிப்போக்கு. நடைநயம் மிளிரும் எழுத்தாளர், குழந்தை இலக்கியப் படைப்பாளர், கூர்ந்த நோக்குடைய கட்டுரையாளர், வாழ்க்கை வரலாற்றாசிரியர், தன் வரலாற்றாளர், கதாசிரியர், மொழிபெயர்ப்பாளர், தடம்புரளாத பத்திரிகையாளர், மற்றும் நுண்மைமிக்க வரலாற்று ஆராய்ச்சியாளர் எனப் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கினார். இளமைக் காலத்தில் கவிதைத் துறையிலும் முயற்சி செய்து தம் கவிதைகளைத் தாமும் நண்பரும் ஆசிரியராயிருந்த பள்ளி ஆண்டு மலரான 'ஜேட்டி' யில் வெளியிட்டார். இவை அனைத்துக்கும் மேலாக, அஸ்ஸாமிய இலக்கியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாத்துப் பரப்பும் பணியில் சலிப்பில்லாத பேரார்வத்துடன் உழைத்து வந்தார். அது அவரது வாழ்நாள் முழுக்க அவரது விரதமாகவே விளங்கியது.

பேணுதர் சர்மா, 1894 நவம்பர் 16ல் அஸ்ஸாம் மேட்டுப்பகுதி மாவட்டமான சிப்சாகரில், சேரிங் பகுதியில், பிற்பட்ட கிராமமான கஸ்பூரியா காகடியில் மத ஆசாரமிக்க பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தையார் டிம்பேஸ்வர் சர்மா. அவரது தாயார் துளசிதேவி.

கிராமிய சுற்றுச் சூழலில் பிறந்து வளர்ந்த சிறுவனான பேணுதர் மற்ற கிராமத்துச் சிறுவர்களைப் போலவே கிராமப்புற வெளி வாழ்க்கையிலும் செயல்பாடுகளிலும் ஈடுபட்டார். இயற்கைச் சூழலில் பழகி, பறவைகள், விலங்குகள், மரங்கள், மலர்கள்,

பருவகால மாற்றங்களின் தொடர்ச்சிகள் போன்ற பல இயற்கைத் தோற்றங்களில் மனம் பழகினார். நகரங்களிலும் பெருநகரங்களிலும் வளரும் சிறுவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பான இது மிகவும் விரும்பத்தக்க வாழ்க்கைக் கல்வியின் ஒரு நல்ல பங்காக உருவாகியது. தன்னையொத்த சிறுவர்களுடன் பேணுதர் கிராமப்புற தட, கள விளையாட்டுக்களிலும் உடல் நலத்துக்குகந்த உடற்பயிற்சி களிலும் ஈடுபாடு காட்டினார். தம்மைச் சார்ந்த மக்களின் வாழ்வுப் போக்குகளையும் வாழ்க்கை முறைகளையும் பழகித் தெரிந்து கொண்டார். இவை அனைத்தும் அவரிடத்தில் சமூக ஒட்டுறவையும் பரிவுணர்வையும் வளர்த்தது. அவ்வுணர்வு பிற் காலத்தில் சமூக சேவையில் அர்ப்பணிப்பாகத் தோற்றம் பெற்றது. அவரது தன் வாழ்க்கை வரலாற்றில் இவற்றில் பல இடம் பெற்றுள்ளன.

மேலும் குடும்ப மரபுகளின் காரணமாக, இளைஞரான பேணுதர் பிராமணப் பண்பாட்டின் பழக்கங்களிலும் செய்முறைகளிலும், தாம் படித்து மனப்பாடம் செய்து ஒப்பிக்க வேண்டிய மத நூல்கள், புண்ணிய நூல்கள் ஆகியவற்றிலும், அறிவும் திறமும் பெற்றார்.

பேணுதர் சர்மா, கிராமத்துச் சிறுவனாகத் தான் வளர்ந்த நிலை குறித்துப் பெருமிதம் அடைந்திருந்தார். அவருடைய பழக்க வழக்கங்களில் கிராமியப் பண்பாட்டின் முத்திரை மிளிர்ந்தது. அது அவரது ஆளுமைக்கு தனித்துவமிக்க கூர்மையைத் தந்திருந்தது.

தன் பெற்றோர்களால் 'வித்யாரம்பம்' என்னும் கல்வித் தொடக்கத்துக்கான சடங்குடன் ஐந்தாம் வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். 1901ல் அவர் சாமர்கோன் உள்ளூர்த் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டு நான்காண்டுகள் பயின்றார். அங்கு ஒரு போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற்றார். அப்பரிசுத் தொகையைக் கொண்டு தம் கல்விப் பயிற்சியை நிறைவு செய்தார். பின்னர் 1905ல் மாவட்டத் தலைநகரான சிப்சாகரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.

சிப்சாகர் பள்ளியில் பயின்ற காலத்தில் பல புகழ்பெற்ற ஆசிரியர்களின் அறிவுத் தாக்கத்துக்கு தாம் ஆட்பட்டுச் சிறந்தது பற்றி அவர் தம் வரலாற்றில் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். நகரத்தின் மேன்மைமிக்க நல்லோர்களால் இயக்கப்பட்ட "பால்யாஸ்ரம்" என்னும் சமுதாய இலக்கிய நிறுவனத்திலும், அது

மூடப்பெற்ற பின், "பிமலாலய சபா" விலும் சேர்ந்து தலைமைப் பண்பிலும், ஆன்மீகம், அறநெறி ஆகியவற்றிலும் பயிற்சி பெற்றார். 1915ல் பேணுதர் தம் நுழைவுத் தேர்வில் தேறினார். [அத்தேர்வு தற்போதைய பள்ளி இறுதித் தேர்வுக்குச் சமமானது]. சிறிது காலம் ஆசிரியப்பணியிலிருந்தபின் கல்கத்தா சென்று பங்கபாசி கல்லூரியில் இடைநிலைக்கல்வி பயின்று 1919 இல் அதனை முடித்தார். 1920 இல் மகாத்மா காந்தி அவர்களின் போராட்ட அறைகூவலை ஏற்றுத் தம்படிப்பைக் கைவிட்டு வெளியேறினார். பட்டத் தேர்வு எழுதுவதையும் கவலையின்றி விட்டார். வீடு திரும்பி அண்ணல் காந்தியடிகளின் கருத்துக்களைப் பரப்புவதில் ஈடுபட்டார்.

பேணுதர் சர்மாவுக்கு அவரது கல்கத்தா வாழ்க்கை ஒரு வகையான அறிவுத் தெளிவுக்கான பயிற்சிக்களமாக அமைந்தது. அந்த மகத்தான பெருநகரத்திலே தன் மனம் ஒளிவிளக்கம் பெற்றதாக அவர் தன் வரலாற்றில் ஒத்துக் கொள்கிறார். கல்கத்தா வில்தான் அவர் அன்று நிலவிய இந்தியச் சிந்தனை மற்றும் இலட்சியங்களுடன் நேர்தொடர்பு கொண்டார். இந்தியச் சிந்தனை மற்றும் உணர்வுகளில் மேலை நாட்டுத் தாக்கத்தை அவர் இங்கே உணர்ந்தார். காந்திஜி உள்ளிட்ட இந்திய விடுதலை இயக்கத்தின் மகத்தான தலைவர்களை அவர் கல்கத்தாவில்தான் கண்டார்; அவர்கள் பேச்சைக் கேட்டார். அவர் தம் நினைவில் மிகவும் பதிந்த தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள்: சரோஜினி நாயுடு, அன்னி பெசண்ட், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், சுரேநதிரநாத் பானர்ஜி, லாலா லஜபதிராய், சித்த ரஞ்சன்தாஸ் மற்றும் பலர். இந்தக் காலகட்டத்தில்தான் அவர் தெளிந்த பொது நோக்கைப் பெற்றார்; அக்காலத்திலிருந்த மற்ற பலரைப் போல சாதி, குழு, மதக்கோட்பாடு, போன்ற பழைய மரபின் இறுக்கமான பிடிப்புகளிலிருந்து துணிச்சலாக விடுபட்டார். குறுகிய வட்டத்தைவிட்டு வெளியேறினார்.

மேலும் கல்கத்தாவில்தான் இளைஞரான பேணுதர், வணிகத்துக்காகவும் கல்விக்காகவும் அங்கே, தங்கியிருந்த அஸ்ஸாமைச் சேர்ந்த பல பெருமைமிக்க பெரியோர்களைச் சந்தித்துப் பழகினார். தாய்நாட்டின் நலத்தை விழைந்த அவர்களது நாட்டுப்பற்றால் அவர் மன எழுச்சி பெற்றார். இவர்களைத் தவிரக் கல்கத்தாவில் அவர், தம் சம வயதினரான அறிவுத் திறம்மிக்க இளைஞர்கள் பலரைச் சந்தித்தார். பிற்காலத்தில் அவர்கள் வாழ்வின் பலதுறைகளிலும் மேன்மை பெற்று விளங்கினர்.

அவர்களில் சிலருடன் இணைந்து அவர் அஸ்ஸாமிய மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்காக ஏற்படுத்திய திட்டங்கள் பிற்காலத்தில் நற்பலன்களை நல்கின. நவீன அஸ்ஸாமை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவராகவே அவர் இன்று கருதப்படுகிறார்.

கல்கத்தாவில் இருந்த காலத்தில், இம்பீரியல் நூலகம் [தற்போது தேசிய நூலகம்] சென்று அஸ்ஸாமைப் பற்றிய வரலாறு மற்றும் தொடர்பான ஆவணங்களை ஆர்வத்துடன் படித்தறிவது கிட்டத்தட்ட அவரது அன்றாட வழக்கமாக இருந்தது. அஸ்ஸாமிய மக்கள், அவர்களது மொழி மற்றும் பண்பாடு தவறாகச் சித்திரிக்கப்படும்போதெல்லாம் அவற்றுக்கு எதிராய் கருத்துப் போரில் பேணுதர் முனைப்போடு ஈடுபட்டார். ஆதாரமில்லாத கருத்துக்களைத் தக்க உண்மைகளுடனும் விவரங்களுடனும் அவர் மறுத்துரைத்தார். இந்தப் பணிக்காக அவர் அஸ்ஸாமின் பழைய வரலாற்றை நுணுக்கமாக ஆராய நேர்ந்தது. இக்கால கட்டத்திலிருந்து அஸ்ஸாமிய வரலாற்றாய்வில் அவரது ஆற்றல் வெளிப்பட்டது; திறம்பெற்ற வரலாற்றாசிரியராக அவர் ஏற்கப்பட்டார். இந்தப் பெருமுயற்சியின் முதல் நல்விளைவாக வேட் (Wade) எழுதிய 'அக்கவுண்ட் ஆப் அஸ்ஸாம்' [அஸ்ஸாம் வரலாறு] என்னும் நூல் பதிப்பித்து வெளியிடப்பட்டது. அது பற்றிய முழு விவரங்கள் இந்த நூலில் தக்க இடத்தில் தனியே தரப்பட்டுள்ளன.

1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வீடு திரும்பிய பின் பேணுதர் சர்மா தம் பகுதியிலிருந்த உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். ஆனால் தம் அனைத்து நேரத்தையும் சக்தியையும் சேரிங் பகுதியில் காங்கிரசை அடிமட்ட அளவில் உருவாக்கவும் அதற்கே தம்மை அர்ப்பணிக்கவும் விரும்பியதால், உடனே தம் வேலையை விட்டு விலகினார். கடுமையான சிரமங்களுக்கு இடையே காங்கிரசின் அமைப்புப் பணியைக் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் அவர் நிறைவேற்றினார். கிராமிய மக்களிடையே விடுதலைக் கருத்துக்களைப் பரப்ப வீடு வீடாக நடந்தும் இரவல் மோட்டார் சைக்கிளில் தொலைதூர கிராமங்களுக்குச் சென்றும் பணியாற்றினார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராக மக்களை விழிப்பூட்டியதால் 1922 ஆம் ஆண்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஜோர்ஹாட் சிறையில் அடைக்கப் பட்டார். அவரது தந்தை இறந்துவிட்டதால் தண்டனைக் காலம் முடிவதற்குச் சற்று முன்பு நிபந்தனையுடன் விடுவிக்கப் பட்டார்.

ஆனால் அதற்குப் பின்னரும் பதினைந்து ஆண்டுக்காலம் காங்கிரஸ் இயக்கப் பணியை அதே ஆர்வத்துடன் தொடர்ந்து செய்துவந்தார். 1937 இல் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு பற்றிய கடுமையான கருத்துவேறுபாடுகளால் கட்சியைவிட்டு விலகினார். அதற்குப்பின் அவர் மீண்டும் கட்சியில் சேரவில்லை. இப்படித்தான் அவருக்கும் அரசியலுக்கும் இருந்து வந்த தொடர்பு முதன்முதலாக முறிந்தது. அவர் தம் வரலாற்றில் குறிப்பிடுவதுபோல, கலகக்காரராக விரும்பாததால்தான் 1942 இல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' [க்விட் இந்தியா] என்னும் கிளர்ச்சியில் பங்கேற்கவில்லை என்கிறார். 1942–43 இல் தேசியப் போர் முன்னணி என்னும் ஓரளவு அரசு சார்ந்த நிறுவனத்தில் அமைப்பாளராக ஒன்பது மாதங்கள் பணியிலிருந்தார். இவ்வாறு சேர்ந்து பணியாற்றியதால் பலரின் வெறுப்புக்கு ஆளானதைத் தன் வரலாற்றில் அவர் ஒப்புக் கொள்கிறார். அஸ்ஸாமின் வேறு இரண்டு இலக்கிய மேதைகள், சூர்யகுமார் புயான், பிரசன்னாலால் சவுத்திரி ஆகியோரும் போர் முன்னணியின் செயற்பாட்டில் பங்கேற்றனர்.

தொலைதூர கிராமங்களுக்குப் போகும்போது அன்னிய ஆட்சியின் போர்ப்பணிக்கு ஆதரவு திரட்டுவதைக் காட்டிலும் பழமையான நூல்களின் கையெழுத்துப்பிரதிகளையும் வரலாற்றுத் தொடர்பான பொருட்களையும் திரட்டுவதில் பெருமளவு அக்கறை காட்டினார். இவ்வாறு மோசமான பணியிலும் ஓரளவு நலம் பெற முடிந்தது. பேணுதர் சர்மா, தம் பழங்கடன்களை அடைக்க பொருள் ஈட்டும் பொருட்டுச் சிலகாலம் காட்டு யானைகளைப் பிடித்தளிக்கும் மகல்தார் [குத்தகைதாரர்] ஆகச் சேர்ந்திருந்தார். அவர் பத்திரிகைத்துறையிலும் தம் பங்களிப்பைச் செய்தார். அவர் "பாடொரி" அஸ்ஸாம் நாளிதழின் துணை ஆசிரியராக ஓராண்டும் "தருண் அஸ்ஸாம்" [மறுமலர்ச்சியுறும் அஸ்ஸாம்] இதழின் ஆசிரியராக மூன்றாண்டுகளும் பணிபுரிந்தார். இந்தப் பொறுப்பில் அவர் அஸ்ஸாம் மக்களின் காவலராக நின்று உரிமைக்குக் குரல் கொடுத்தார். குறிப்பாக ஒன்றைக் கூறலாம். அப்போதைய மாநில முதல்வர் சர் முகம்மது சாதுல்லா வங்காள மாநில மாவட்டமான மைமன்சிங் [தற்போது பங்காளதேஷ் நாட்டில் உள்ளது] பகுதியிலிருந்து முஸ்லீம்களை ஆயிரக்கணக்கில் குடியேற்றவாசிகளாகக் கொண்டு வந்து அஸ்ஸாமில் குடியமர்த்துவதைத் தம் கொள்கையாகக் கொண்டிருந்தார். பேணுதர் அதை மிக வன்மையாகக் கண்டித்தார். உலகப்போர் நடந்து வந்த

காலத்தில் இந்த நாளிதழ் தன் வெளியீட்டை நிறுத்த நேர்ந்தது.

காங்கிரசிலிருந்து விலகிய பின், பேணுதர் சர்மா கிராம முன்னேற்றத்துக்கான நலத்திட்டங்களை தம் பகுதி மக்களுக்காகத் தொடங்கி மிகச் சிறப்பாக நிறைவேற்றினார்.

1951ல் பேணுதர் தம் சேரிங் கிராம வீட்டை விட்டு வெளியேறி, அப்போது வடகிழக்கு இந்தியாவின் கல்வி மற்றும் வணிகமையமாக உருவாகி வந்த, குவாஹாத்தியில் நிரந்தரமாகக் குடியேறினார்.

1956ல் பேணுதர் சர்மா, அஸ்ஸாம் மாநிலத்தின் முதன்மையான இலக்கிய நிறுவனம் ஆகிய அசோம் சாகித்ய சபாவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னதாக ஷில்லாங்கில் நடைபெற்ற இந்நிறுவனத்தின் வரலாற்று அமர்வுக்குத் தலைமை தாங்கினார். டெல்லி, நாகபுரி, அகமதாபாத் ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்திய வரலாற்றுப் பேரவையின் ஆண்டு உறுப்பினர் கூட்டங்களிலும் பங்கேற்றார். 1960ல் தம்முடைய கோங்ரசார் கன்சியாலிரோடாட் [காங்கிரசின் நிழலில்] என்னும் நூலுக்காக சாகித்திய அக்காதெமி விருது பெற்றார்.

அவர் மத்திய அரசிடமிருந்தும் அஸ்ஸாம் மாநில அரசிடமிருந்தும் இலக்கியத்துக்கான ஓய்வூதியம் பெற்றார்.

சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து 1981 பிப்ரவரி 26ல் காலமானார்.

1983ல் அவருக்கு மறைவுக்குப் பின் "பத்ம பூஷன்" விருது வழங்கப்பட்டது. அவருடைய படைப்புகளை ஆறு பிரிவுகளாகப் பகுக்கலாம். அவை,

1. சிறுவர் இலக்கியம்
2. வாழ்க்கை வரலாற்று நூல்கள்
3. வரலாற்று நூல்கள்
4. நினைவுக்குறிப்பு மற்றும் தன்வரலாறு
5. பிறவகை உரைநடைப் படைப்புகள்
6. மொழி பெயர்ப்புகள்

## 2

# குழந்தை இலக்கியம்

பேணுதர் சர்மாவின் குழந்தை இலக்கியப் படைப்புகளில் முதலில் குறிப்பிட வேண்டியது ராங்பாடா. [ஒரு உலோகத் தகடு : நூல் மிகவும் சிறியதாக இருந்தது தான் தலைப்புக்கான காரணம் எனலாம்] குழந்தைகளுக்கான 13 கதைகள் கொண்ட நூல் அது. ஆசிரியரது தனி இயல்புப்படி அமைந்த மரபுத் தொடர் மிளிரும் நடையில் எழுதப்பட்ட இவை, இளம் உள்ளங்களில் நாட்டுப்பற்றைத் தூண்டும் நோக்கில் அமைந்தன. அஸ்ஸாமிய மக்களின் பண்பாட்டுக் கூறுகள் மற்றும் அவர்களது போற்றத் தக்க வாழ்க்கை மதிப்புகளின் அடிப்படையில், வாழ்வைப் பற்றிய ஆரோக்கியமான கண்ணோட்டத்தை இக்கதைகள் குழந்தைகளிடம் வளர்க்க முனைந்தன. குழந்தைகளுக்காக எழுதப்பட்டவையே எனினும் மூத்த வாசகர்களையும் கவர்ந்தன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அஸ்ஸாம் சமூகப் போக்குகளை ஒவ்வொரு கதையும் சித்திரித்துக் காட்டியது.

ஐந்து கதைகள் வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்டவை. இரண்டு கதைகள், புகழ்மிக்க அஹோம் மன்னர் சிவசிங்காவின் துடிப்பும் கூரறிவும் படைத்த ராணிகளில் ஒருவரான பூல்மதியின் தனிப்பண்பை வெளிக்காட்டுகின்றன. மன்னர் சிவசிங்கா வரலாற்றுப் புகழ்மிக்க கௌரிசாகர் ஏரியைத் தோண்ட முன்முயற்சி எடுத்தவர். மற்ற மூன்று கதைகளில் ஒன்று 1670 இல் வரலாற்றுச் சிறப்புமிக்க சரய்கட் போரில் முகலாயரைத் தோற்கடித்து அவர்களது தொடர்ந்த படையெடுப்பை முடிவுக்குக் கொண்டுவந்த அஹோம் தளபதி லச்சிட் பர்புக்கான் வாழ்க்கையைக் கூறுகிறது. நான்காவதுகதை, தன் கணவர் இளவரசர் கோடபணியை அரசரின் ஆத்திரத்திலிருந்து காப்பாற்றும் பொருட்டு மனிதத் தன்மையற்ற சித்திரவதையையும் மரணத்தையும் தழுவிய அஹோம் இளவரசி ஜயமதியின் அழியாத தியாகங்களை வருணிக்கிறது. ஐந்தாவது கதை விடுதலைப்போரில் ஈடுபட்ட அஸ்ஸாமின் புகழ்மிக்க தியாகி

மணிராம் திவான் பற்றியது. எல்லாக் கதைகளும் உயிர்ப்பாற்றல் மிக்கவையாகவும், படிப்பதற்கு மிகமிக எளிமையாகவும், சிறுவர்களின் கவனத்தை எளிதில் கவர்பவையாகவும் உள்ளன. அத்துடன் பேணுதர் சர்மாவின் வழக்கப்படி அஸ்ஸாம் வரலாற்றுத் தொடர்பான, குறிப்பாக அஹோம் ஆட்சிக் காலத் தொடர்பான, முதன்மையான வரலாற்றுத் தகவல்கள் சிறுசிறு அளவில் இருந்தன.

முழுமையாகப் பார்க்கும்போது, கதைகள் மகிழ்ச்சி தருவனவாகவும் அறிவூட்டுவனவாகவும் இருந்தன. கதை நிகழ்ச்சிகளுடன் கதாசிரியரின் பாராட்டத்தக்க கதை கூறும் பாணியும் கதைகளின் கவர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இன்றுவரை இவை குழந்தைகளால் மிகப் பரவலாக விரும்பப்படுவதே இவற்றின் வெற்றிக்கு அடையாளம். லாடுமணி [அலங்காரப் பாசிமணிகள், 1959] பாரம்பரிய அமைப்பில் எழுதப்பட்ட எட்டு உயிரோட்டமிக்க சிறுவர் கதைகளைக் கொண்ட நூல். எனினும் மூத்தவாசகர்களையும் அதே அளவுக்கு ஈர்க்கும் வகையிலுள்ளது. ஒரு வெற்றிகரமான கதைஆசிரியரின் உத்திநுணுக்கம் என்பது இளம்வாசகரின் கவனத்தைப் பற்றிப் பிடித்தல், என்ன நடக்குமோ என்னும் எதிர் பார்ப்புணர்வையும் ஆர்வத்தையும் தூண்டிக் கடைசிவரை அதை நிலைக்க வைத்தல், நிகழ்ச்சிப்போக்குகளை வேடிக்கையாகவும் மகிழ்வூட்டுவதாகவும் அமைத்தல், நீதிக் கருத்துக்களை ஆங்காங்கே குறுக்கிட்டுச் சொல்வது போலத் தோன்றாமல், கதையூடே கலந்து தருதல் மற்றும் இவை அனைத்தையும் நன்கு தெரிந்த எளிய, சொற்களில் தெளிவான நடையில் வழங்குதல் ஆகியனவற்றில் அடங்கும். இந்தக் கதைகளின் பின்னணி பழங்காலத்துக் கிராமியச் சூழல் கொண்டது. எனினும், அறிவியல் தொழில் நுணுக்கம் மிக்க இக்காலத்து இளம் உள்ளங்களையும் ஈர்த்து ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது. இதில் ஐயம் ஏதும் இல்லை. இந்தக் கதைகளின் புகழுக்குக் காரணம் மாயக் கவர்ச்சிமிக்க மொழி நடையே எனலாம்.

குழந்தை இலக்கிய எழுத்தாளர் என்னும் முறையில், லட்சுமிநாத் பேஷ்பருவாவுக்கு அடுத்து இரண்டாம் நிலையில் சிறந்து நிற்கிறார் பேணுதர் சர்மா. இந்த இடத்தில் நினைவு கூரத் தக்க மற்றொரு குழந்தை இலக்கிய எழுத்தாளர் காலஞ்சென்ற மித்ரதேவ் மகந்தா ஆவார்.

மரமர் காரேங் [மிகநேசிக்கப்பட்ட அரண்மனை, 1969] பாரம்பரிய முறையில் அமைந்த நவீனச் சிறு கதைகளிலிருந்து வேறுபட்ட எட்டுக் கதைகள் அடங்கியது. ஒவ்வொன்றும் கதாசிரியரின் திறமான விரிவான பாத்திரப் படைப்பும், இடச் சித்தரிப்பும் அவருக்கே உரிய சிறு விவரங்களின் நுண்ணோக்கும் அமைந்த மனம் நெகிழவைக்கும் மிகவும் ஆழமான நிகழ்ச்சிப்போக்கு கொண்டவை. இவற்றில் 'பிரதித்வனி' [எதிரொலி] என்னும் உருக்கமான கதை, மிஷிங் இன இளம்பெண் 'ரொசோய்' க்கும் "பாண்டி" [யானை பிடிப்பவர்] ஆன 'பிஹூஷிவா' வுக்கும் ஏற்படும் மனமொத்த காதல் பிணைப்பையும் தன் முதலாளிக்காக ஒரு புதிய யானைக்கூட்டத்தைப் பிடிக்கச்சென்ற அவ்விளைஞர் தற்செயலாகக் கொல்லப்படுவதையும், விதியின் கொடூர விளையாட்டினால் அக் காதல் கருகிய மொட்டாக ஆவதையும் வருணிக்கிறது. டெசாங் பகுதியின் ஆற்றோரப் பின்னணியிலும் அதையடுத்த பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி மற்றும் அருகாமையிலுள்ள மக்கள் நெரிசல் நிறைந்த மலை வாசியினரின் கிராமப் பின்னணியிலும் அமைக்கப்பட்டது இக்கதை. கதைத் தொனியையும் சூழ்நிலையையும் முழுமையுடன் இணைத்தமைத்த சிறப்பினாலும் திடீரென உச்ச கட்டத்தில் நிகழும் அழுத்தமான சோக நிகழ்ச்சியாலும் இக்கதை குறிப்பிடத்தக்க இடம் பெறுகிறது. ரஜனிகாந்த பொர்டோலெய் எழுதிய செவ்வியல் நாவல் "மிரியாரி" யில் வரும் தலைவிதியின் குறுக்கீட்டால் துன்புறும் இளங்காதலர்களை, இக்கதை உணர்வோட்டமிக்க வாசகருக்கு நினைவூட்டும். கதையிடையே வரும் பிஹூலி பாடல்களின் சிலசில வரிகளும் வசந்த கால இயற்கைக் கோலத்தின் விரிவான கவர்ச்சிமிக்க படப்பிடிப்புக்களும் கதையின் முழுத் தாக்கத்தை மேலுயர்த்துகின்றன. வாழ்க்கையின் முரண்பாடுகளைப் பரிவுடன் வழங்கிய முறைக்காக இக்கதை நினைவுகூரப்படும். தலைப்புக்கதை, அஸ்ஸாமிய கிராமப் புறத்தின் இயற்கைப் பின்னணியில் அமைக்கப்பட்டு, 'சுவாகி'யின் மேல் ரொங்கைக்கு எழுந்த மவுனக் காதலையும் அது இறுதியில் நிறைவேறுவதையும் எடுத்துச் சொல்கிறது. 'சிக்சகர் சுக்' [ஒரு ஆசிரியரின் மனநிறைவு] முரண்பட்ட போக்கில், குற்றமற்ற மாணவனை இரக்கமில்லாமல் வகுப்பறையில் அடித்துவிட்ட ஆசிரியர் தம் செயலுக்கு மனம் வருந்தி, துக்கங்கொண்டு அதன் விளைவால் நோய்வாய்ப்பட்டு மயங்கிப் பிதற்றி அதே நாளில் உயிர் நீத்ததைக் காட்டுகிறது. 'ஆஜிஹே மோர்பியா" [இன்றுதான் உன் உண்மையான திருமண நாள்] காளிந்திரி என்னும் கறுப்புநிற

இளம்பெண்ணுக்கும் அவளது கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் கஜுராமுக்கும் இடையே எழுந்த அன்பு பல ஆண்டுகள் நிறைவேறாத கனவாய் இருந்ததையும் இருவரையும் தவிக்க வைத்த அக்காதல் இறுதியில் நிறைவடைவதையும், படிப்போர் மனம்நெகிழச் சொல்கிறது. 'படிதோத்வார்' [வீழ்ந்தவர் மீட்கப்படுதல்] ஓர் உண்மையான வரலாற்று நிகழ்ச்சியின் தழுவலாகும். இறுதிக் கதையான, திரோதார்மோன் [ஒரு பெண்ணின் உள்ளம்] மாப்பசான் கதையின் மொழி பெயர்ப்பாகும்.

சிலவற்றைத் தவிர இத்தொகுப்பிலுள்ள மற்ற கதைகள், அஸ்ஸாம் மக்களின் பாரம்பரியப் பண்பாட்டுப் பாங்கினையும் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய அவர்களது வாழ்க்கை ஒழுகலாறுகளையும் காட்டுகின்றன.

ஒவ்வொரு கதையும் சமுதாயத்தில் உள்ள ஏழை எளியவரிடத்தும் நலிவுற்ற பிரிவினரிடத்தும் ஆசிரியர் கொண்டிருந்த ஆழ்ந்த பரிவுணர்ச்சியை எதிரொலிக்கின்றன.

கதாசிரியரின் இயல்பான, மரபுத் தொடர்மிளிரும் நடைநலத்துடன் எளிமையாகவும் நேரடியாகவும் சொல்லப்படும் கதைகள், அவரது வாசகனது கவனத்தை இறுகப்பற்றிக் கதைகூறும் தனித் திறத்தைக் காட்டுகின்றன. கதை எழுதுபவர் என்னும் முறையில் பேஜுதர் சர்மா மிக மேம்பட்ட நிலையில் உயர்ந்து நிற்கிறார். இதில் லட்சுமிநாத் பேஷ் பருவா ஒருவர் மட்டுமே இவரை விஞ்சியவர் எனலாம்.

# 3

## வாழ்க்கை வரலாறுகள்

பேணுதர் சர்மா, தமது காலத்தில் அஸ்ஸாமின் மகத்தான பெருமைக்குரிய கங்காகோவிந்த புக்கான் [1841–1926] பற்றிய சுருக்கமான வாழ்க்கை வரலாற்றை 1948 ஆம் ஆண்டு வெளியிட்டார். கங்காகோவிந்த பிரிட்டிஷாருக்குக் கீழ் பல்வேறு பொறுப்புக்களில் திறமிக்க அதிகாரியாக விளங்கியவர். அவர் சற்றும் மனந்தடுமாறாத நேர்மையாளர், நற்பண்புமிக்க இயல்பினர், காலனி ஆதிக்க ஆட்சியாளரிடம் சேவை செய்த போதிலும் தன் கருத்துச் சுதந்திரத்தையும் முடிவெடுப்பதில் நேர்மையையும் நிலை நிறுத்தியவர் என்று பேணுதர் சர்மாவால் புகழப்படுகிறார்

அவர் அன்னிய ஆட்சி அதிகாரிகளின் சில உயர் குணங்களான வேலைத் திறம், கடமையாற்றுவதில் பேரார்வம், கல்வியறிவில் பெருவிருப்பம் போன்றவற்றை உதாரணமாகப் பின்பற்றிய, பிரிட்டீஷ் ஆதிக்கத்தின் செயல்திறமிக்க அலுவலர்களின் தலைமுறையைச் சேர்ந்தவர். பரவலாகப் பொதுமக்களால் சிம்ஹபுருஷ் [சிங்கம் போன்ற மாமனிதர்] என்று போற்றப்பட்ட கங்ககோவிந்த, அன்றிருந்த மிகச் சில மற்ற அலுவலர்களைப்போல, தம் முழு வாழ்நாளையும் அனைத்துச் சிந்தனையையும் தம் மக்களின் நல்வாழ்வுக்கே அர்ப்பணித்தவர். வெளித்தோற்றத்தில் ஆடையாலும் நடத்தையாலும் வெள்ளைப் பிரபுபோலிருந்தாலும் அவர் உள்ளத்தால் பொதுமக்களோடு கலந்துநிற்கும் ஒரு மனிதராகவே மிளிர்ந்தார். நவீன அஸ்ஸாமை உருவாக்கிய தொடக்க கால நிறுவனர்களில் ஒருவர் என அவர் போற்றப்படுகிறார். அவரது உள்ளார்ந்த தனி ஆளுமையும், உயர்வுகளும் தாழ்வுகளும் மிக்க நிகழ்ச்சிகள் செறிந்த அலுவல் வாழ்க்கையும், வாழ்க்கை வரலாற்றில் ஆசிரியரால் முழுமையாக விரித்துரைக்கப்பட்டுள்ளன. கங்க கோவிந்த அவர்களின் வாழ்விலும் அலுவலிலும் தொடர்புற்ற பல சுவையான சம்பவங்களும் இல்வாழ்க்கை விவரங்களும் ஆங்காங்கே இவ்வரலாற்றில் கலந்துவருகின்றன. இவ்வரலாறு 19ம்

நூற்றாண்டின் பிற்பட்ட கால அஸ்ஸாமிய மக்களின் சமூக, அரசியல் நிலை குறித்துப் பெருமளவில் வெளிப்படுத்துகிறது. சிந்தனைச் சிறப்பும் நாட்டுப்பற்றும் இணைந்து விளங்கும் அவரது தனி ஆளுமையை வியக்கத்தக்க விதத்தில் படம் பிடித்துக் காட்டியதில் தான், இந்நூலின் வெற்றி அடங்கியுள்ளது. இந்த வியத்தகு விளைவை உருவாக்கிட, ஆசிரியர் "உண்மைகளை வெளிச்சமிட்டு வெளிக்காட்டும்" கலை நுணுக்கத்தை இங்கே பின்பற்றுகிறார். இந்த மகத்தான மனிதரை நினைவுகூர்ந்து போற்றுவதும் அவரைப் புதிய தலைமுறை சார்ந்த இளைஞர் கூட்டத்திற்கு இலட்சியச் செம்மலாய் எடுத்துக்காட்டுவதும் ஆசிரியரது நோக்கங்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது; இல்லையெனில் நாம் அவரை மறந்துபோயி ருப்போம். இப்படைப்பில் ஆசிரியர் கையாளும் நடை, சாதாரண மாகத் தொகுத்துரைக்கும் போக்கில் உள்ளது. ஆசிரியருக்கே இயல் பான மரபுத் தொடர்கள் ஆங்காங்கே இடைவர எழுதப்பட்டுள்ளது.

**மணிராம்** திவான் [1950] என்பது பேணுதர் சர்மாவின் முதன்மையான படைப்புகளில் ஒன்று. அந்நூல் அவருக்கு அனைத்துத் தரப்பினரின் புகழுரையையும் அவரது தகுதிகாரணமாகவே பெற்றுத் தந்துள்ளது. இந்நூல் 1858 பிப்ரவரி 24இல் பிரிட்டிஷ் ஆட்சியால் தூக்கிலேற்றப்பட்ட புகழ் பெற்ற அஸ்ஸாமிய விடுதலைப் போராட்ட தியாகியின் வாழ்க்கையின் வரலாற்றுப் பதிவாகவும் அதே நேரத்தில் அக்கால கட்டத்தின் வரலாறு மற்றும் சமூக வாழ்வின் ஆவணமாகவும் திகழ்கிறது. இருபதாண்டுகளுக்கும் மேலாக கடும் சிரமங்களை மேற்கொண்டு ஆசிரியர் செய்த ஆராய்ச்சியின் பயனாக இது அமைந்தது. இவ்வரலாறு தோன்றும்வரை, மணிராம் திவான் நாட்டுக்காகத் தியாகம் புரிந்தவர், துணிச்சல் மிக்கவர் என அறியப்பட்ட காவியத் தலைவராக மட்டுமே இருந்தார். பேணுதர் சர்மாதான் முதன் முதலாக அவரது வாழ்க்கை மற்றும் செயற்பாடுகள் பற்றி நுண்ணிய விவரங்களை எடுத்தளித்தார். இந்நூல் ஒரு புரட்சியாளர் மற்றும் நாட்டுப்பற்றாளரின் வாழ்க்கைத் தொகுப்பாகவும் அதே நேரத்தில் ஆழ்ந்த நோக்கில் எழுதப்பட்ட வரலாற்று ஆவணமாகவும் இருந்தது. அதுமுதன்மையாக அன்றைய அஸ்ஸாமிலிருந்த அஹோம் அரசின் மேல் பர்மாவின் படையெடுப்பும் அதன்பின் 1826 இல் யாண்டபூ ஒப்பந்தப்படி கிழக்கிந்தியக் கம்பெனி அஸ்ஸாமைத் தன் ஆளுகையில் இணைத்துக் கொண்டதுமான காலகட்டத்தைப் பற்றியதாக இருந்தது. அந்த வரலாற்றுப் பின்னணி

தவிர்க்கமுடியாதது. ஏனெனில் மணிராம் திவானின் வாழ்க்கை வரலாற்றை அந்நாளில் அவர் பங்குகொண்டிருந்த அரசியல் விவகாரங்களை விட்டுவிட்டுத் தனித்ததாக எழுதுவது என்றும் இயலாது. ஆனாலும் ஆசிரியர் தான் எடுத்துக்கொண்ட பொருளை வரலாற்று விவரங்களின் சிக்கல்வலையிலே கைநழுவவிட்டுவிடவில்லை. மணிராம் பக்ரியின் தனித்தன்மை, அவரது துணிச்சல், அஞ்சாமை, முன்னோக்கு, கூரறிவு அனைத்துக்கும் மேலாக அவரது கொழுந்துவிட்டு எரியும் நாட்டுப்பற்று ஆகிய எல்லாவித அடிப்படைப் பண்புகளுடன் வியக்கத்தக்க விதத்தில் எழுத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நூலின்பக்கங்களில் காணப்படும் உருவம் ஒரு கற்பனையின் மறுபடைப்பல்ல. ஆசிரியர் பல ஆண்டுகளுக்கு மேலாகப் பெருமுயற்சி செய்து சேகரித்த பல வரலாறு மற்றும் இதர ஆவணங்களை மதிப்பீட்டுக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து கண்ட விவரங்களின் மேல் எழுப்பப்பட்டது அவ்வடிவம்.

அந்தப் பகுதி மற்றும் அதன் எல்லையை ஒட்டியிருந்த மலைப்பகுதி அரசுகள் ஆகியவற்றின் அரசியல் வளர்ச்சி பற்றிய முழுமையான விவரங்களும், அஸ்ஸாமுக்கு வெளியே நாட்டின் பிற பகுதிகளில் சிப்பாய்க் கலகத்தினால் ஏற்பட்ட விளைவுகளும், அந்தக் காலகட்டத்தின் அரசியல் நிலவரங்களைச் சரியாக விளக்குவதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, சரியான கருத்துப்படி, மணிராம் திவான் விடுதலை உணர்வின் கலங்கரை விளக்கமாகப் போற்றி உயர்த்தப்பட்டுள்ளார். அவ்வாறேதான் நாட்டு மக்களாலும் அவர் இன்று மதிக்கப்படுகிறார். அந்தக் கால கட்டத்தின் வரலாற்றை அவர் வடித்தளித்த முறையில் எல்லோருக்கும் உடன்பாடு இல்லாமலிருக்கலாம் என்றாலும், அவர் மணிராமின் புகழுருவை எடுத்தளித்த பாங்கு எல்லோரது இதயத்தையும் தொடுவதாக உள்ளது.

மீண்டும் கூறுவோமானால், இந்தப் படைப்பு வாழ்க்கை வரலாறு பொது வரலாறு ஆகிய இரண்டன் கலவையாக விளங்குகிறது. வரலாற்றுப் போக்குக்கும் கூட மணிராமின் பாத்திரப் படைப்பே அடிப்படையாக அமைகிறது. பொதுமக்கள் மனதில் பதிந்திருந்த விடுதலைப் போராளி என்னும் உருவத்தின் அடிப்படையிலேதான் அவரைப் பற்றிய படிமத்தை வழங்க முழுமுயற்சி செய்கிறார். இதில் ஐயத்திற்கு இடமேதும் இல்லை. இந்தச் செயற்பாட்டினால்,

இப்படைப்பு ஆர்வத்தை மிகுதிப் படுத்தினாலும், சிலர் எண்ணுவதுபோல, நடுவுநிலையில் நழுவியிருக்கலாம். இந்த இடத்தில் கீழ்வரும் பெர்ராண்ட் ரஸ்ஸலின் கருத்துக்கள் மிகப் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

"............... வரலாற்று ஆர்வமில்லாத வாசகரிடத்திலும் கூடிய அளவுக்குச் சிறந்த பயனை ஏற்படுத்த வேண்டுமானால், வரலாறு எப்படி எழுதப்பட வேண்டுமென்ற கேள்விக்கு இப்போது வருவோம். இங்கே எல்லாவற்றுக்கும் முதலாவதாக மிக எளிய தேவை ஒன்று உள்ளது. வரலாறு சுவையுள்ளதாக இருக்க வேண்டும். சில குறித்த காரணங்களுக்காக சில வரலாற்று விவரங்களை அறிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு மட்டுமல்லாமல், கவிதையை அல்லது ஒரு நல்ல நாவலை வாசிக்கிற உணர்வுடன் வாசிக்க விரும்புவோர்க்கும் ஆர்வமூட்டும் வகையில் இருக்க வேண்டும் என எண்ணுகிறேன். இதற்கு முதலாவதாக, வரலாற்றாசிரியர் தான் தொகுத்துக்கூறும் நிகழ்ச்சிகளிலும் வருணிக்கும் பாத்திரங்களிலும் உணர்வு பூர்வமான ஈடுபாடு கொண்டிருப்பது கட்டாயத்தேவை. வரலாற்றாசிரியர் வரலாற்றுண்மைகளைச் சிதைத்து மாற்றக் கூடாதென்பதும் பின்பற்றத்தக்க விதியாகும். ஆனால் அதற்காக அவர் வருணிக்கும் மோதல்களிலும் தகராறுகளிலும் ஒரு பகுதியினைச் சார்ந்து அவர் நிற்கக் கூடாதென்பது கட்டாயமல்ல. ஒரு வரலாற்றாசிரியர், நடுநிலைமை என்னும் பெயரில் எல்லாத் தரப்பினரையும் ஒப்பப் போற்றுவதாக இருந்தாலும் அந்தப் பாத்திரங்களிலே தம் கதாநாயகர்களையும் எதிரிகளையும் காண இயலாதவராகவும் இருந்தால், அவர் ஒரு சுவையற்ற சலிப்பூட்டும் எழுத்தாளராகவே இருப்பார். வாசகர் ஆர்வமுடன் படிக்க வேண்டுமென்றால், வரலாற்று நாடகத்திலே ஒருசார்பாய் பங்குபற்ற அனுமதிக்க வேண்டும்........... கார்லைல் தமது பிரெஞ்சுப்புரட்சி வரலாற்றைப் பற்றிக் கூறுகையில் அந்த நூலே ஒருவகையான பிரெஞ்சுப்புரட்சிதான் என்றார். அது உண்மைதான். ஒரு வரலாற்று ஆவணமாக கருதப்படப் போதிய தரவுகளை அது கொண்டிருக்கவில்லையெனினும் அது எழுதப்பட்டிருக்கும் முறை அந்நூலுக்கு ஓர் உள்ளார்ந்த தகுதியை வழங்குகிறது என்பது உண்மையே ஆகும். ["ஹிஸ்டரி அஸ் ஆன் ஆர்ட்" வரலாறு ஒரு கலைவடிவம் என்னும் விதத்தில்]"

மணிராம் திவான் 'நூலில் பேணுதர் சர்மா ரஸ்ஸலின் இலட்சியத்தை நெருக்கமாகப் பின்பற்றி உள்ளார் என்பது

வாசகருக்கு எளிதில் புலப்படும். கடந்துசென்ற காலகட்டத்திற்கு அவர் புத்துயிர் ஊட்டியுள்ளார்; பழமையை நிகழ்காலத்தின்மேல் ஏற்றிக் காட்டியுள்ளார். அவருடைய நூல் ஒரு சலிப்பான படைப்பல்ல. ஏனெனில் தமது நூலின் நாயகரை அவர் குறித்துணரத்தக்க மேன்மையாளராய் வடித்துக்காட்டியுள்ளார். அதிலேதான் அவரது வெற்றி அடங்கியுள்ளது.

தொலைநோக்குள்ள நாட்டுப்பற்றாளரும் செயல்வீரருமாகிய மணிராம் திவான், நவீன காலத்தில் அஸ்ஸாம், மற்றும் அதன் மக்களை, அவர்களது பழம் பெருமை, தனித்தன்மை ஆகியவற்றை நேசித்ததில் தனக்கிணையில்லாதவராய் இருந்த பேணுதர் சர்மாவின்மேல் ஒரு மாயக்கவர்ச்சியை செலுத்திவிட்டதுபோலத் தோன்றுகிறது. முன்னமே எடுத்துரைத்ததுபோல, இவரும் ஒரு செயல்வீரர். இவரும் நாட்டுநலத்துக்காகத் துன்பங்களை ஏற்றவர். இதனால், மணிராம் திவானின் வாழ்வும் தியாகங்களும் நம் எழுத்தாளரின் இதயத்தில் ஒத்த உணர்வினைத் தொட்டெழுப்பியது வியப்பிற்குரியதல்ல. இது நூலின் முதல் பகுதியில் பெருமளவுக்குச் சித்தரிக்கப்பட்டுள்ளது. பேணுதர்சர்மா, மணிராம் திவானின் மறைவின் ஆண்டு நினைவு நாள் சிறப்பு நிகழ்ச்சிகளை அவரது பிறந்த ஊரான 'சேரிங்' கில் நடத்தி வந்தார் என்பதும், இந்நூலைத் தவிர அவரைப் பற்றிய மற்ற சில விரிவான கட்டுரைகள் எழுதியுள்ளார் என்பதும் நினைவுக்கொள்ளத் தக்கது.

"சாதாவன் சால்" நூலுக்கு தாம் எழுதிய முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிடுவதாவது, "............. மணிராம் திவான் இறப்பை அறிவதற்கில்லை. அவர் நாட்டின் இதயமாகிய பேழையில் நிரந்தரமாகப் பதிக்கப் பெற்றுள்ளார். நமது மக்கள் வாழ்வியலின் உட்செறிந்த பாதுகாப்பிடத்தில் நிலைத்து வாழ்கிறார்".

ஆசிரியர் தமது படைப்பின் ரத்த ஓட்டமாக "மணிராம் திவான்" நூலைக் கருதினார். அவர் தனது இறப்புக்கு முந்திய நாளன்றுகூட, அந்நூலில் சில அச்சுப் பிழைகளைத் திருத்தி அதன் எதிர்காலப் பதிப்புகளை மேம்படுத்த விரும்பினார் என்று கூறப்படுகிறது.

இந்த நூல், வாழ்க்கைவரலாற்றைத் தவிர 1825–50 காலகட்டத்தில் பிரிட்டிஷ் நிர்வாகமுறை, அஸ்ஸாம் எல்லைப்புற மலை அரசுகளின் அன்றைய நிலை, அஸ்ஸாமில் பிரிட்டிஷ் ஆட்சியின்

Indian I... 117383

எதிர் விளைவு, அஸ்ஸாமிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் விடுதலைப் போருக்கான முன்னேற்பாடுகள், ஆகியனபற்றிய சுருக்கமான விவரங்களையும், அதனோடு தொடர்புடைய பல்வேறு செய்திகளையும் கொண்டுள்ளது. 13 பின்னிணைப்புகளில் தேவையான புள்ளி விவரங்களையும் பெருமளவில் ஆவணத் தகவல் விவரங்களையும் வழங்கியுள்ளதால் இந்நூல் வருங்கால ஆராய்ச்சியாளர்களுக்கு மிகமிகப் பயன்தருவதாய் உள்ளது. மேலும் பிரிட்டிஷாரால் உயிர் இழப்புக்களையும் கடுந்துயரங்களையும் பல்விதங்களில் அடைந்த மணிராம் திவானின் 18 துணைவர்களைப் பற்றிய சுருக்கமான வாழ்க்கைவரலாற்றுச் சித்தரிப்புகளும் நூலில் தரப்பட்டுள்ளன.

நூலின் மொழிநடை ஒரு சீராக நிலைநிறுத்தப்படவில்லை. தொகுத்துரைக்கும் இடங்களுக்கேற்ப, சில சமயங்களில் சுவை ததும்பி வழியும், [முதல் பகுதியைப் போல], அவரது எளிய மரபுத் தொடர் செழுமிய நடைத்திறன் இங்கே சற்று மெலிவுற்று அமுங்கித் தெரிகிறது.

நெகிழ்ச்சிகளுக்கும் உணர்ச்சித் திறத்துக்கும் பெயர்பெற்ற மணிராம் பற்றிய நாடறிந்த நாட்டுப்பாடல், நூலின் பொருத்தமான முடிவுச் சிகரமாக அமைந்துள்ளது.

அர்க்யாவளி [காணிக்கைகள், 1964] 19 ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த அஸ்ஸாமின் இருபத்தொரு மேன்மையாளர்களைப் பற்றிய, நடுத்தர அளவிலான நினைவுக்குறிப்புகளின் தொகுப்பு நூல். அவர்கள் எல்லோரும் அவர்களுடைய தலைமுறையின் மதிப்புமிக்க மனிதர்கள், அந்தப் பட்டியலில், அனைத்து வகைப்பட்ட இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், வரலாற்றாசிரியர்கள், தொல்பொருள் ஆய்வாளர்கள், நூலகர்கள், பத்திரிகையாளர்கள், அகராதி வல்லுநர்கள், நாட்டுப்பற்றாளர்கள், மற்றும் சமூகத் தொண்டர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, இந்த நினைவுக்குறிப்புகள். தாயகத்தின் நல்வாழ்விற்காகக், கடமைப் பொறுப்புமிக்க அந்த நல்லோர் கொண்டிருந்த பேரார்வம் மற்றும் உணர்வூக்கம் பற்றிய எழுச்சியூட்டும் தொகுப்புரைகளாக விளங்குகின்றன.

எடுத்துரைக்கப்பட்ட வாழ்க்கைவரலாறுகளில் சில, லட்சுமிநாத் பேஷ்பருவா, பத்மநாத் கோஹைன் பருவா, கனக்லால் பருவா,

ஜகந்நாத் பருவா, தருன் ராம் பூக்கான், ஹேம்சந்திரகோஸ்வாமி ஆகியோரைப் பற்றியன. ஒவ்வொரு நினைவுக் குறிப்பிலும் ஆசிரியர் அந்தந்தக் காலகட்டத்திற்குத் தொடர்பான வகையில் விசயத்தைக் வழங்கியிருந்தார். நுணுக்கமாகக் கூறினால், அவர் அந்தந்த மாமனிதரையும் அவரது காலச் சூழலையும் வழங்கியிருந்தார். இந்நூலில் எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து மனிதர்களும், மேலைநாட்டு மனிதாபிமான உணர்வு உள்ளொளிர, இன்று பரவலாக வங்க மறுமலர்ச்சி என்று அறியப்படுகிற சூழல் தொடர்பில், அஸ்ஸாமைப் பலதுறைகளிலும் மறுகட்டமைப்புச் செய்யும் பெரும்பணியில் ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டோர் ஆவர். அவர்களது தனிப்பண்பு சொந்த நாட்டின்மேலும் மக்களின் மேலும் கொண்ட அழுத்தமான அன்பால் ஒளிமிக மின்னுகிறது. அவரவருடைய பண்புநலன்களின் கூறுகள் வெளித்தெரிகின்ற பல நிகழ்ச்சிகளையும் சூழ்நிலைகளையும் எடுத்துரைத்து அதன்மூலம் வாழ்க்கையின் நுண்ணோக்குகளை விளக்கும் உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார். இந்த முறையின்மூலம் தாம் எடுத்துக்கொண்ட ஒருவரது வாழ்வு நிகழ்வுகளை மிகவும் நெருக்கமாக உணருமாறு உருவாக்கி உண்மை நிகழ்ச்சிகளை கற்பனையைவிடச் சுவையாக அமைத்துக் கண்டறிந்த விவரங்கள் வாசகரின் மனதில் நிலைபெறுமாறு செய்கிறார். நூலாசிரியர், தம் கதைத் தலைவர்களது தனி ஆளுமையைத் தெளிவான கோணத்தில் காணுமாறு செய்து அதன்மூலம் வாசகரது ஆர்வத்தைத் தூண்டிவிடுகிறார். அவர் வரலாற்றை வழங்கும் விதம் தம் நூற்பொருளாய் அமைந்தோரை நன்கு வெளிப்படுத்திக் காட்டுவதாக உள்ளது. வாழ்க்கை வரலாற்றின் அமைப்பு முறை, வெளித்தோன்ற விளங்க வைப்பதாகும். நூலின் நடை, வருணனை முறையில் ஒழுங்கு, எளிமை மற்றும் நெருடலில்லாமை உடையதாகும். தொனி, பெரும்பாலும், அடக்கமிக்கதாகும். வாழ்வுக் குறிப்புகளின் சமூகப் பின்னணிகள் தளத்தை விரிவாக்கியுள்ளன. இந்நினைவுக் குறிப்புகள் முழுமையான வாழ்வோவியங்களை வழங்குகின்றன. வெறும் கோட்டு வடிவங்களை அல்ல. வாசகர் மேல் அவை செலுத்தும் செல்வாக்கு என்றும் அழியாதது ஆகும்.

எழுத்தாளரது தீவிரமான சமூக வரலாற்றுணர்வு, இவ்வாழ்வுக் குறிப்புகளுக்கு மெய்ம்மை அடிப்படையை வழங்குகிறது. முழுமையாகப் பார்த்தால், இக்குறிப்புகள் அந்நாளைய அஸ்ஸாமின் சமூக, கலாச்சார அரசியல் வாழ்வின் விரிவான படப்பிடிப்புக்களாக விளங்குகின்றன.

இதுபோன்ற சிறப்புள்ள வேறு நூல் இல்லாததால், 'அர்க்யாவளி' அஸ்ஸாமிய வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் நெடிய பாரம்பரியத்தில் தனிச்சிறப்பான இடத்தை வகிக்கிறது. தமது வரலாற்றுத் தலைவர்களின் மேல் ஆசிரியர் கொண்ட பரிவான புரிந்துணர்வுதான் இந்நூலின் வெற்றிக்கு அடிப்படை. நூலின் தலைப்பு உணர்த்துவது போலவே ஆசிரியரது கண்ணோட்டம் உளமார்ந்த பாராட்டும் ஆழ்ந்துணர்ந்த மரியாதையும் நிறைந்ததாகும். அவர்களது பல்வேறு அறிவுத் திறங்களாலும் உணர்வு நலங்களாலும் முழுமையாகக் கவரப்பட்டவராக ஆசிரியர் விளங்கினார். சொந்த நாட்டின் மீதும் மக்கள் மீதும் பூண்டிருந்த பேரன்பே நூலில் எடுத்துரைக்கப்பட்ட அனைவரது வாழ்விலும் பொதுத் தகுதியாக அமைந்தது. முன்னமே கூறியுள்ளபடி, எழுத்தாளரே தம்மளவில் தம்மக்களுக்காகத் தன்னலமற்ற சேவைபுரியும் இலட்சியம் நிறைந்தவராதலால், தாம் எடுத்துக் கொண்ட தலைவர்களை தன்னை ஒத்த மனநலத்தினராய்க் கண்டார் என்பது மிகையாகாது.

தம் காலத்திய மேன்மையாளர்களின் வாழ்வில் ஆசிரியர் கொண்ட அக்கறை, அஸ்ஸாமை நவீன முறையில் புத்துருவாக்கம் செய்ய விரும்பிய அவரது ஆர்வத்தை எடுத்துக்காட்டுவது ஆகும். இந்த வரலாற்றுக் குறிப்புகள் நினைவு கூர்தல் முறையிலமைந்தவை. நூலாசிரியர் தமது வாசகர்களுக்குக் குறிப்பாக இளைய தலைமுறை வாசகர்களுக்கு, உணர்வுத் தூண்டல் நல்கும் எடுத்துக் காட்டுகளாக இவற்றைக் எண்ணினார் எனத் தோன்றுகிறது. தகுதி மிகுதி படைத்த இந்த மேலோரது வாழ்க்கை பின்பற்றத் தக்கதென இவர் நினைத்திருக்கலாம்.

மேலும் பண்டிட் ஹேமசந்திர கோஸ்வாமியின் வாழ்க்கை வரலாற்றை மிக விரிவான அளவில் நூல் வடிவத்தில், மிகக் கடுமையான உழைப்பின் பலனாய் உருவாக்கி பேணுதர் சர்மா அளித்தார். இதுவும் ஒரு தகவல் களஞ்சியமாகத் திகழ்கிறது. இது எந்த இலக்கிய வரலாற்றாசிரியனுக்கும் பெரிதும் பயன்பட வல்லது.

4

## பலவகை உரைநடைப் படைப்புகள்

பேணுதர் சர்மாவின் மற்ற பலவகை உரைநடைப் படைப்புகளில் டுனோரி [ஒரு பேழை, 1963] முதலாவதாகும். இது பல்வேறுபட்ட பொருள்களைப் பற்றிய பதினைந்து சிறு கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு. இரண்டு கட்டுரைகள் நவீன அஸ்ஸாமிய இலக்கியத்தின் * 'ஜொனாகி' மற்றும் 'பான்ஹி'* காலகட்டத்தை தம் பொருளாகக் கொண்டுள்ளன. நான்கு கட்டுரைகளை இலக்கியத் திறனாய்வு என வகைப்படுத்தலாம். அவற்றில் ஒன்றில் அவர் லட்சுமிநாத பேஸ்பருவாவின் அழியாத பாத்திரமாகிய 'கிரிபாபர்' பற்றி ஆய்கிறார். மற்றொன்றில் அதே எழுத்தாளரது சிறுகதைகள் பற்றி ஆராய்கிறார். மூன்றாவது கட்டுரை அஸ்ஸாமிய நாடக வளர்ச்சியை மீள்பார்வை செய்கிறது. நான்காவது கட்டுரை கதைப் பாடலைக் கவிதை வடிவமாக நோக்குகிறது. மற்றொன்று அஸ்ஸாமியப் பழமொழிகளை ஆராய்ந்து பார்க்கிறது. வேறொரு கட்டுரையின் பொருள், அஸ்ஸாமியக் கையெழுத்து இலக்கியம் ஆகும். "நூறாண்டுகளுக்கு முன் அஸ்ஸாமிய சமூகம்", "அஸாம் சாகித்யசபா" "தோல்பாராவின் முற்கால வரலாறு பற்றி ஒரு பார்வை" "அஸ்ஸாமிய நெசவு பாரம்பரியம்", "அஸ்ஸாமில் விடுதலைப் போராட்டம் 1930–47" ஆகியன தொகுப்பிலுள்ள மற்ற கட்டுரைகளில் சில ஆகும்.

---

அஸ்ஸாமிய இலக்கியத்தின் 1889 முதல் 1940 வரையிலான காலகட்டம். இரண்டு நன்கறியப்பட்ட இலக்கிய, மாத இதழ்கள்.

1. "ஜொனாகி" [ஒரு மின்மினிப்புழு — 1889 ல் கல்கத்தாவில் தொடங்கப்பெற்றது]

2. "பான்ஹி" [புல்லாங்குழல் — 1909 ல் கல்கத்தாவில் தொடங்கப்பெற்றது]

மேற்கத்திய இலட்சியங்களைப் பெரிதும் சார்ந்த, நவீன அஸ்ஸாமிய இலக்கியம் உருவாக்கம் பெற முதன்மையான பங்களிப்பைச் செய்தன. சந்திரகுமார் அகர்வால் முன்னதன் முதல் ஆசிரியர். லட்சுமிநாத பேஸ்பருவா பின்னதன் முதல் ஆசிரியர்.

கடைசியாகக் குறிப்பிடப்பட்ட கட்டுரையில் ஆசிரியர், நாட்டு விடுதலைப் போராட்டத்தில் அஸ்ஸாமியப் பெண்கள் ஆர்வம் மீதூர பங்கெடுத்துக் கொண்டது பற்றியும் அவர்கள் அதற்காகப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்ட வேதனைகள் மற்றும் இழப்புகள் பற்றியும் விரிவான விவரங்களுடன் எடுத்துக் கூறியுள்ளார். இவ் விவரங்கள் இதுகாறும் மிகப்பலரால் அறியப்படாதனவே. "நம்பிக்கைக்குத் தகுதியாயிருத்தல்" என்னும் கட்டுரை ஆழமான பகுப்பாய்வு ஆகும். தன்மையில் இக்கட்டுரை அகச்சார்பானது எனலாம்.

இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கட்டுரைகளின் அடிநாதமாக விளங்குவது, அஸ்ஸாமியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் மேல் கட்டுரையாளர் கொண்டுள்ள ஆழ்ந்த காதலே ஆகும். ஒவ்வொரு கட்டுரையும் ஊடுருவும் நுண்ணோக்கு, தற்சார்பற்ற தன்மை, எளிமை ஆகிய பண்புகளால் தனித்தன்மை கொண்டு விளங்குகிறது.

தூய்மையும் எளிமையும் பொருந்திய நடையில் எழுதப்பெற்ற இக்கட்டுரைகள் பரவலான தகவல்களுடன் வாசிப்பதற்கு ஏற்றதாகவும் உள்ளன.

"பூல் சந்தன்" [மலர்களும் சந்தனமும் 1968] என்பது சிலகதைகள், சொற்பொழிவுகள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். மேலும் அவை பல்வேறு விதமான பொருள்பற்றி எழுதப்பட்டவை. இவற்றின் எண்ணிக்கை 21 ஆகும். அஸ்ஸாமிய உரைநடையின் வளர்ச்சியும் பெருக்கமும், 1846 இல் சிப்சாகர் நகரில் அமெரிக்கன் பாப்டிஸ்ட் மிஷனரிகளால் வெளியிடப்பெற்ற செய்தி மற்றும் கருத்துக்கள் இடம் பெற்ற இதழான "அருணோதய்", மன்னர் பாஸ்கர வர்மன், பழங்கால அஸ்ஸாமிய ஆடைகள், பழமொழிகளிலும் உருவகச் சொற்றொடர்களிலும் வெளிப்படும் நாட்டுப்புறப் பண்பாடு, ஆகியன எழுத எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள்களில் சில ஆகும். சில படைப்புகள் எளிய, சாதாரண நடையிலும் சில எழுத்தாளருக்கே உரிய வகையான மரபுத் தொடர்கெழுமிய தனித்த நடையிலும் அமைந்தவை. இக்கட்டுரைகள் பழங்கால அஸ்ஸாமிய வரலாறு மற்றும் பண்பாடு பற்றிய ஆசிரியரின் பரந்துபட்ட அறிவைக் காட்டவல்ல அளவுகோல் எனலாம்.

# 5

## வரலாற்றுப் படைப்புகள்

பேணுதர் சர்மா அஸ்ஸாமிய வரலாற்றைத் துருவித் துருவி ஆராய்ந்தவர். இம்முயற்சியில் அவர் யாருக்கும் சளைத்தவரல்லர். அஸ்ஸாமில் வாழ்ந்த பல்வேறு இனத்தினர், ஆட்சிபுரிந்த அரசவம்சத்தினர்கள் பற்றிய பண்பாட்டு அரசியல் வரலாற்றில் பேரறிவு பெற்றவராயிருந்தார் அவர். மேலும் இடங்களின் பெயர்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் வரலாற்று முதன்மையையும் அறிந்திருந்தார். அவர் பல சமயங்களில், மேம்போக்காகத் தோன்றுகிற சலிப்பான சொல் அல்லது சொற்றொடர் ஒன்றினால் புலன் கிடைக்கப்பெற்று ஓர் இடம் அல்லது மக்கள் குழு பற்றிய வரலாற்றுப் பழமையை அகழ்வாய்வு செய்வார். கிழக்கில் சடியா முதல் மேற்கில் தூப்ரி வரை விரிந்திருந்த அஸ்ஸாம் மாநிலத்தின் எல்லா மூலை முடுக்குகளையும் அவர் அறிந்திருந்தார். மாநிலத்தின் சொந்த மக்கள் குழுக்கள் பலவற்றின் பழமையை நுண்ணாய்வு செய்வது அவரது தனி மகிழ்ச்சியாக அவரது இறுதிக்காலம் வரையில் தொடர்ந்தது. தம் மக்களை அவர்களது பெருமைமிக்க பழம்புகழையும் தற்போதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான தாழ்வையும் உணரத் தூண்டுவது அவரது வாழ்க்கை நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. அஸ்ஸாமிய வரலாற்றிலிருந்து சில பெருமை வாய்ந்த மாமனிதர்களின் குறிப்பிடத்தக்க விடுதலை நேயத்தையும் தடுமாறா நெஞ்சுறுதியையும் வருணிப்பதன் மூலம் இதனைச் சாதிக்க ஆசிரியர் விரும்பினார். பேணுதர் சர்மாவும், அவருடைய புகழ்மிக்க இலக்கிய முன்னோடிகளும் தம்மை இலக்கியப் பணிக்குக் காணிக்கையாக்கிக் கொள்வதையே தாய்நாட்டுக்குச் செய்யும் பெருந் தொண்டாகக் கருதினர். அவருடைய கடும் முயற்சி நிறைந்த வரலாற்று ஆய்வுகள் அத்தகு தொண்டின் ஒருபகுதியே ஆகும். அவர் எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்றில் தம் வாழ்வின் அறுபதாண்டுகள் வரலாற்று ஆய்விலேயே கழிந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அஸ்ஸாம் வரலாற்றில் தணியாத பேரார்வம் பேணுதர் சர்மாவுக்கு இருந்தபோதிலும் அவரை அறிவியல் அடிப்படையான வரலாற்றா சிரியர் என உரிமை கொண்டாட இயலாதெனப் பலர் கருதுகின்றனர்.

வரலாற்று முரண்பாடுகளை முழுமையாக அவரால் தவிர்க்க இயலவில்லை எனவும் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர் வரலாற்று ஆய்வுகளுக்கான ஒரு நெறிமுறை அமைப்பையோ, அல்லது அஸ்ஸாமின் முழுமைபெற்ற வரலாற்றையோ விட்டுச் செல்லவில்லை. ஆனால் அவர் தம் வழிமுறைச் சொத்தாக விலை மதிப்புமிக்க வரலாற்று ஆய்வுகளை விட்டுச் சென்றுள்ளார் என்பதை மறுக்க முடியாது. அஸ்ஸாம் மற்றும் அஸ்ஸாமிய மக்களது பழம் வரலாற்றை நன்குணர்ந்த மனிதர் ஒருவர் நேற்றுவரை வாழ்ந்திருந்தார் என்றால் அவர் பேணுதர் சர்மா தவிர வேறு யாருமல்லர் என்பதே அவரது பெருமையாகும். நாம் இதனை ஏற்கவே வேண்டும். வரலாற்று ஆய்வில் அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்புவது எளிதல்ல.

வரலாற்று ஆராய்ச்சியில் பேணுதர் சர்மாவின் முதல் முயற்சி டாக்டர் ஜான் மீட்டர் வேட் எழுதிய வரலாற்றுப்படைப்பான "ஆன் அக்கவுண்ட் ஆஃப் அஸ்ஸாம்" என்பதைப் பற்றியாகும். டாக்டர் பீட்டர் வேட், 1792–93ல் மௌமோரியா கிளர்ச்சியை அடக்க, அஹோம் அரசர் சுவர்க்கதேவ் கௌரிநாத் சிங்காவுக்கு உதவிப்படை நடத்தி வந்த கேப்டன் வெல்ஷ் என்பவருடன் வந்த மருத்துவர் ஆவார்.

1918–ல் பேணுதர் சர்மா இந்த நூலைப் பற்றியும் இது லண்டன் இந்தியா ஆபீஸ் நூலகத்தில் கையெழுத்துப் படியாக உள்ளது என்பதனையும் முதன் முதலில் அறிந்தார். அதிகார வர்க்க எதிர்ப்புக்கிடையில், அன்றைய கல்கத்தா இம்பீரியல் நூலக நூலகர் திரு சேப்மன் அவர்களது தனி உதவியால் இந்நூல், அக்கால மாநிலத் தலைநகரான ஷில்லாங்கில் இவருக்குக் கொடுக்கப்பட்டது. பேணுதர் அதனை நகல் எடுத்து, பதிப்பித்து 1927 இல் வெளியிட ஏற்பாடு செய்தார்.

அதுவரை இந்த நூலைப்பற்றி உலகத்திற்கே தெரியாமலிருந்தது. இந்த வெளியீட்டு முயற்சி பேணுதர் சர்மா ஒரு முனைப்புள்ள வரலாற்று ஆராய்ச்சியாளர் என்று பலரும் அறிந்து கொள்ளச்

செய்தது. ஆசிரியர் தமது வாழ்க்கை வரலாற்றில் [பகுதி—8 இயல் 1 பக்கங்கள் 492—508] இந்தப் பணியை முடிப்பதற்குத் தாம் எதிர்கொண்ட பல தொல்லைகளை விவரித்துள்ளார். அது படிக்கும்போது உணர்வை சிலிர்க்க வைப்பதாகவும் அதே சமயத்தில் ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர் என்னும் முறையில் அவருடைய அறிவு தீவிர ஆர்வத்தையும் விடாமுயற்சியையும் நமக்கு எடுத்துரைப்பதாகவும் விளங்கியது. அவர் இதில் பெற்ற அனுபவங்கள் இத்துறையில் மேலும் பிற முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதாக விளங்கியது. இந்த வரலாற்று ஆய்வுப்பணியின் போது பேணுதர் சர்மா அப்போது அரசு அலுவலர்களாகவும் ஐரோப்பிய தேயிலைத் தோட்டத்தில் மேலாளர்களாகவும் அஸ்ஸாமில் வசித்த மிடில்டன், டாக்டர் ஹட்டன் போன்ற பல பிரிட்டிஷ் ஆசிரியர்களையும் அறிஞர்களையும் தொடர்பு கொள்ள முடிந்தது.

சாதாவன் சால் "1857" [1947] [பின்னர் ஆங்கிலத்தில் 'தி ரிபெல்லியன் ஆஃப் 1857 விஸ் அவிஸ் அஸ்ஸாம்' [1958] என்று மொழி பெயர்க்கப்பட்ட நூல்] அதன் தலைப்பு சுட்டிக் காட்டுவது போலவே 1857ம் ஆண்டின் விடுதலைப் போர் பற்றியும் அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் அஸ்ஸாமின் பங்கு பற்றியும் விவரிப்பதாகும். ஆசிரியரின் சொற்களில் கூறப்படுவதாவது :—

நிலை பெற்ற மதிப்படைந்த வரலாற்று ஆசிரியர்கள் விடுதலைப் போராட்டத்தில் அஸ்ஸாமின் பங்கு பற்றி ஒரு குறிப்போ தலைப்போ எழுதிடவே இல்லை. அவர்கள் அவ்வாறு சொல்லாமல் விட்டுச் செல்வதற்கு உகந்த காரணங்கள் உள்ளன. அஸ்ஸாமில் நடந்த நிகழ்ச்சிகள், அஸ்ஸாமியர்களின் சாதனைகள் மற்றும் வெற்றிகள், அவர்களது கடுமையான துயரங்கள் மற்றும் மன வேதனைகள் பற்றிய வரலாற்றறிவு அவர்களுக்கு மிகமிகப் போதாததாயிருந்தது. மேலும் வரலாற்றாசிரியர்களது அஸ்ஸாமிய அறிவு அரைகுறையாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் தேவையான அனைத்து செய்திகளும் வங்காளம் அல்லது கல்கத்தாவிலிருக்கும் வடிகட்டிகளைக் கடந்துதான் அவர்களை அடையமுடியும். அஸ்ஸாமியர்களைப் பற்றி இந்தியர்களும் ஏன் சில அஸ்ஸாமியர்களும்கூட, வங்கத்தில் ஆளும் ஐரோப்பிய அதிகாரிகள்

மனத்தில் எதிரொலித்த வடிவத்தைத்தான் அறிந்திருந்தனர். எனவே அஸ்ஸாமைப் பற்றிய அவர்களது அறிவு ஒரு நகலை மறுநகல் எடுத்ததன் எதிரொளிப்புதான் — அசலிலிருந்து மூன்று பங்கு விலகிய வடிவம்தான்".

இந்த நிலைமையைச் சீர்திருத்த வேண்டியும், அஸ்ஸாமுக்கு வெளியே, குறிப்பாகக் கல்கத்தாவில் செய்தியிதழ்கள் மற்றும் பொதுமக்களில் சில குறிப்பிட்ட பகுதியினரிடையே நிலவிய சில தவறான கருத்துக்களைக் களைய வேண்டியும் பேணுதர் சர்மா இப்போது நாம் எடுத்தாராய்கிற நூலை எழுதினார். முழுமையான இந்திய வரலாற்றுப் பின்னணியில் 19ம் நூற்றாண்டு அஸ்ஸாம் வரலாற்றைக் கண்டறிகிற முதல் ஆதாரப்பூர்வ நூலென்று ஏற்பளித்துப் போற்றத் தகுதியான நூல் இதுவாகும்.

'தூர்வீன்' [தொலைநோக்கி, 1961] என்பது பன்னிரண்டு கட்டுரைகள் அடங்கிய தொகுப்பாகும். அவற்றில் எட்டு அஸ்ஸாமிய வரலாற்றில் அளப்பரிய முதன்மைபெற்ற எட்டுப் பெருமக்களைப் பற்றியன. மீதி நான்கும் முறையே [1] 'தி அருணோதோய்' [2] அஹோம் அரசர் சுவர்க்கதேவ் சந்திரகாந்த் சிங்கா, போடோன் பார்புக்கானுக்கு எழுதிய கடிதம் [கடிதம் முழுக்க வெளியிடப்பட்டுள்ளது] [3] மணிராம் திவான் ரகசிய மொழியில் எழுதிய இரண்டு கடிதங்கள் [ரகசியமொழி புலப்படுத்தப்பட்டு வெளிப்படையாகத் தரப்பட்டுள்ளது] [4] சில புரியாத அரிய அஸ்ஸாமியச் சொற்களின் பொருளை விரித்துரைப்பது — ஆகிய செய்திகளைப் பற்றியதாகும்.

வரலாற்றுப் பெரும்மக்களைப் பற்றிய கட்டுரைகளில், நூலின் தலைப்பு உட்பொருளாகக் காட்டுவதுபோல மேன்மைமிக்க வரலாற்றுத் தலைமக்களின் வாழ்வைத் தொலைநோக்குக் காட்சியாக வழங்கியுள்ளார். 1974 இல் வெளியிடப்பெற்ற நூலின் மூன்றாம் பதிப்புக்கு ஆசிரியர் எழுதிய முன்னுரையின் சுருக்கமான சாரம் வருமாறு :

'வலிமை பொங்கும் பிரம்மபுத்ரா ஆற்றின் இருகரைகளிலும் இருந்த சிற்றரசுகள் ஒருங்கிணைக்கப்பட்டு அஸ்ஸாம் எனப் பெயர் பெற்றது முதல், அப்பகுதி பிரிட்டிஷ் மேலாண்மையில் ஆட்பட்டிருந்த முதல் கால் நூற்றாண்டு வரையுள்ள கால கட்டத்தில்

மிகச்சில மனிதர்கள் — ஒவ்வொருவரும் சிங்க நிகர் செம்மை மிக்கவர்கள் தோன்றினர். வரலாற்று மாற்றங்களை உருவாக்கி நாட்டுப்பற்றும் தியாகமும் கொண்ட எடுத்துக்காட்டான இலட்சிய வாழ்வை வாழ்ந்து காட்டினர். அவர்கள் வெளிக்காட்டிய விடுதலை உணர்ச்சி தற்போது பொன்னெனப் போற்றி மொழியப்படுகிறது. அத்தகைய வரலாற்றுத் தலைவர்களின் உள்மனப் போராட்டங்களையும் வரலாற்றுத் திருப்பங்களையும் ஒரு தொலை நோக்கியின் மூலம் தெரிவது போலப் பார்த்திட காலனி ஆதிக்க அடிமைநிலையில் மூச்சுத் திணறும் நாட்களில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த நூலிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் அந்த மிகப் பழைய காலங்களின் மங்கிய ஒளிச்சிதறலில் எழுதப்பட்டன ஆகும்.

அஸ்ஸாமிய வரலாறு என்பது கற்பக மரம் போன்றது. [கற்பக மரத்தின் கீழ் நின்று விரும்பினால் விரும்பியது கிடைக்கும் என்பது பழமைக் கதைக்கருத்து] சரியான கூர்நோக்குள்ள ஒருவர், அவ்வரலாற்றிலிருந்து, இலக்கியம், அரசியல்ஞானம், சமூக வளர்ச்சிக்கான வழிவகைகள், மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கான செய்திகளைப் பெருமளவில் கண்டறிய இயலும். இந்திய வரலாற்றுடன் ஒப்பிடும்போது அஸ்ஸாமிய வரலாற்று நிகழ்ச்சிகள் வீச்சிலும் முக்கியத்துவத்திலும் அளவில் குறைந்து தெரிந்தாலும், இந்த வரலாற்றைப் பதிவு செய்யும் முறைகள் இந்தியாவின் பிற மாநிலங்களில் கையாளப்படும் முறைகளைவிட மிகமிக மேன்மை வாய்ந்தவையாகும். அஸ்ஸாமிய வரலாற்றில் எல்லா வகையான நிகழ்ச்சிகளுக்கும் தடயங்கள் கிடைக்கின்றன. சீரிய அரசியல் முதன்மை வாய்ந்த புதுயுகம் உருவாக்கும் நிகழ்ச்சிகளிலிருந்து குறுகிய வீட்டளவிலான நிகழ்ச்சிகள் மற்றும் சூழ்நிலைகள் வரை செய்திகள் பெறலாம். பிற மாநிலங்களில் வரலாற்றுப் பதிவுகளைப் பொறுத்தவரையில் அவ்வாறு பெறுவது அரிது.

பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பாதிவரை, தமது நாட்டு விடுதலையைப் பாதுகாக்க கடுமையான சோதனைகளுக்கு இடையே உண்மையாகவே ஒன்றிணைந்து போராடியவர்கள், இந்தியாவைப் பொறுத்தவரையில் அஸ்ஸாம் மக்கள் மட்டுமே. இதனைத் தங்கள் வழிகாட்டி நெறியாகக் கொண்டு அஸ்ஸாம் மக்கள் மோமை தாமுலி

பார்பருவாவின் வழிகாட்டுதலில் தம் சமூகத்தைப் புதிய முறையில் வடிவமைத்தனர். லாச்சித் பார்புக்கானின் முழுச்சிறப்பான தலைமையில் மொகலாயரை முறியடித்தனர். பூர்ணானந்தா மற்றும் போடோன்சந்திராவுக்கிடையேயான போட்டியின் விளைவால் எழுந்த உள்நாட்டுக் கலவரத்தின் துயரமயமான நாட்களிலும் கூட விடுதலையைத் தக்கவைத்துக் கொள்ளக் கத்திமுனையில் நடப்பது போன்ற அருஞ்செயல் நிகழ்த்தினர். மேலும் ரோங்கிலியின் தூண்டுதலால், அமைச்சர்களின் சட்டத்துக்குப் புறம்பான ஆட்சியைக் கூட ஆதரித்தனர். வலிமை படைத்த ஊழ்வினைச் சக்கரம் சுழற்றிப் புறந்தள்ளியதன் விளைவாக இதே அஸ்ஸாமிய மக்கள் பிரிட்டிஷ் ஆளுகையின் தொடக்க நிலைப் பத்தாண்டுகள் சிலவற்றில் ஆட்சி மயக்கத்தில் ஆழ்ந்த உறக்க நிலைக்குச் சென்றதும் உண்மைதான்.

இருந்தபோதிலும், நாட்டின் முதல் விடுதலைப் போரின் மூலம் அவர்கள் அனைவரும் தக்க காலத்தில் விழிப்புணர்வு பெற்றனர். மக்களின் உள்ளங்களில் ஆழ்ந்து நிலவிய விடுதலைத் தாகம் வலிமை பொங்கும் பிரம்மபுத்திராவைப் போலத் தடையற்ற வெள்ள ஓட்டமாய் மீண்டும் சிலிர்த்தெழுந்தது. வரலாறு மீண்டும் திரும்பி வரத் தொடங்கியது. இந்த மறுமீட்சி நம் விழிப்புணர்வுக்கு வழிகோலட்டும் – உள்ளத்தில் இந் நம்பிக்கையுடன் இந்தத் தொகுப்பை மக்களுக்குப் படைக்கிறேன். வாசகர் இதன் ஆழ்ந்த முக்கியத்துவத்தை உணர்ந்து தெளிந்தால் என் உழைப்புக்குச் சிறந்த பலன் கிடைத்தது எனக் கருதுவேன்".

இது கட்டுரைகளின் நோக்கத்தை விளக்குகிறது. பிற இடங்களைப் போலவே இங்கேயும் நாட்டின் பழங்காலப் பெருமையைப்பற்றிய தெளிந்த உணர்வைத் தூண்டுவதன் மூலம் வருங்கால நலனை நல்ல அடிப்படையில் கட்டமைப்பது படைப்பின் உறுதிமிக்க நோக்கமாக விளங்குகிறது.

ஆயினும் நூலிலுள்ள பல்வேறு நிகழ்ச்சித்தொகுப்புக்கள், சலிப்பூட்டும் வரலாற்று விளக்கங்களாக அமையவில்லை. அவை இலக்கியம் போல உயிரோட்டம் மிக்கவை. பிற யாருக்கும் தோன்றாத சிறப்பான முறையில், வரலாற்றின் வறண்ட எலும்புக்கூடுபோலும் நிகழ்வுகளுக்கு எவ்வாறு உயிரும் பொருட்சிறப்பும் தருவது என்பதை பேணுதர் சர்மா அறிந்திருந்தார்.

முதல் கட்டுரை, "பார்பருவா மோமை தாமுலி" என்பது சாதாரணக் குடிமகன் மோமை, பார்பருவா என்னும் மேன்மைமிக்க தகுதிக்கு உயர்ந்து சென்றதுபற்றிய சுவையான கூர்நோக்கு அமைந்த நிகழ்ச்சித் தொகுப்பு, முகலாய முற்றுகையாளர்களுக்கு எதிரான தந்திரமிக்க எதிர்ப்பு, சிற்றரசுப் பகுதியில் மக்கள் கணக்கெடுப்பை அறிமுகப்படுத்தல், 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அஸ்ஸாம் பொருளாதாரத்தை அவர் உருவாக்கிய முறை ஆகியனபற்றியதாகும். அக்கால வரலாற்றுப் பெருமக்கள் தொடர்பான சுவை கெழுமிய உரையாடல்கள் சிறிய நிகழ்ச்சிகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய சுவைநல்கும் வருணனைகள் இடையிடையே வருகின்றன.

இவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஆசிரியர் பின்வரும் முடிவுகளை எடுத்தளிக்கிறார்.

[அ] ஓர் அரசை வலுவான அடிப்படையில் கட்டமைப்புச் செய்வது ஓர் அரசைப் போரில் வெல்வதை விட மிகமிகக் கடுமையான செயலாகும்.

[ஆ] கடமை உணர்வு, விடா முயற்சி, கடினமான பணியாற்றுதல் ஆகியவற்றின் கூட்டால் உருவாகிய மகத்தான, தனிச்சிறப்பான ஆற்றலுடன் ஒப்பிடும்போது குடும்ப கௌரவம் ஒரு சைபர்தான்.

[இ] வாய்ப்பும் ஊக்குவிப்பும் வழங்கப்பட்டால் ஒரு சாதாரண மனிதன் கூட அறிவுத்திறம் வாய்ந்த அரசியல் பெருமகனாக உருவாகிக்காட்ட முடியும்.

மோமை தாமுலி பார்பருவாவின் பொது நிர்வாகம் மற்றும் இராணுவ விவகாரங்கள் ஆகிய இருவகையிலும் சிறந்த வாழ்வை எடுத்துக் கூறுவதன் மூலம் மேற்கண்ட கருத்தை மெய்ப்பிக்கிறார் நமது பேணுதர் சர்மா.

இரண்டாவது கட்டுரை "பங்கால் வைரி லாச்சித் பார்ப்புக்கான்" [முகலாயர்களின் கடும் எதிரி – லாச்சித் பார்புக்கான்] என்பது ராம்சிங்கா தலைமையில் படை நடத்திவந்த முகலாயரை கௌஹாத்திற்கு அருகில் உள்ள "சாராய்கட்" போரில் முறியடித்த புகழ்மிக்க அஹோம் தளபதியைப் பற்றியதாகும். புகழ்மிக்க படைத்தலைவரின் எடுத்துக்காட்டான துணிச்சல் மற்றும் மன

உறுதியை நமது எழுத்தாளர் நன்கு சுட்டிக்காட்டுகிறார். அஸ்ஸாமிலுள்ள ஒவ்வோர் இல்லத்திலும் போற்றப்படும் பெயர் லாச்சித். அந்த முதன்மை வாய்ந்த போருக்கு முதன்நாளில், போர்ப்பணியில் சுணக்கம் காட்டிய தன் தாய்மாமனைத் தலைகொய்தபோது "உறவினரைவிட உயர்ந்தது என் தாய்நாடே' என முழங்கினார். பல்வேறு நிகழ்வுகள், சூழ்நிலைகளில் இன்றியமையாத திருப்பங்கள், முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள், மகத்தான விளைவுகள் ஆகியவற்றை விளக்கி வரைவதன்மூலம் தமது விடுதலையைப் பாதுகாக்க அஸ்ஸாம் மக்கள் நடத்திய நெடிய போராட்டத்தின் முழுவீச்சையும் ஆசிரியர் மிகச் சிறப்பாகப் படைத்தளித்துள்ளார். வரலாற்றுப் போக்கின் நடுநிலைக் கண்ணோட்டத்தைத் தக்கவைத்துக் கொண்ட அதே நேரத்தில், லாச்சித்தை வரலாற்று மனிதர் என்பதைவிட இலக்கியப் பாத்திரப்படைப்பாக வழங்கியது ஆசிரியரின் தனிச்சிறப்பைக் காட்டுகிறது.

இக்கட்டுரையும் இத்தொகுப்பிலுள்ள பிற கட்டுரைகளைப் போல எதிர்பார்த்த அளவில் வரலாற்று விவரங்கள் நிறைந்ததாய், ஆனால் வாசகரின் மகிழ்வைக் குறைக்கும் அளவுக்கு விவரச் சுமை அதிகமாகி விடாமல் உள்ளது. அஸ்ஸாம், உலகில் தனது பெருமை மிக்க இடத்தை மீண்டும் பெறும் வகையில், லாச்சித்தின், நாட்டுப்பற்று, நெஞ்சுறுதி, தன்னலமற்ற நாட்டுத்தொண்டு மற்றும் உயர்பண்புகளை வாசகர்கள் பின்பற்ற வேண்டுமென்னும் நூலாசிரியரின் வேண்டுகோளுடன் கட்டுரை நிறைவு பெறுகிறது.

தொகுப்பிலுள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க கட்டுரையான 'அஸோமோத் ஃபிரிங்கி' [அஸ்ஸாமில் பிரிட்டிஷார் நுழைவு] கூர்நோக்கும் அறிவுத்திறமும் வாய்ந்ததாகும். முகம்மதுகாசிம் என்பவரால் பெர்சிய மொழியில் எழுதப்பட்டு 1780 இல் ஹென்றி வின்ஸ்டார்ட் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டு "ஆசியாடிக் ரிசர்ச்" சில் வெளியிடப்பட்ட "ஆலம்கீர் நாமா" போன்ற வரலாற்று ஆதாரங்கள் இக்கட்டுரைக்கு ஆதாரமாக அமைகின்றன. இந்த நூலின் அஸ்ஸாம் பற்றிய பிரிவில் அஸ்ஸாம் மக்களின் இயல்புக்கூறுகள் சமூக வழக்கங்கள், அரசியல் நடைமுறைகள் பற்றிய குறிப்புகளிலிருந்து விரிவான அளவில் தமது கட்டுரையில் மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் சுவர்க்கதேவ் கமலேஸ்வர் சிங்காவின் ஆட்சித் காலத்தின் போது அன்றைய

அஹோம் அரசின் தலைநகரான கார்கோன் நகருக்கு செவாலியர், டாக்டர் ஆன்செல்வே, மெஸ்ஸியூர் பேலார்ட் ஆகிய மூன்று பிரெஞ்சுக்காரர்களின் வருகையை அவர் குறிப்பிடுகிறார். அஸ்ஸாமின் வரைபடத்தை வரைவது அவர்கள் நோக்கமாயிருந்தது. ஆயினும் அவர்கள் நுழைந்தவுடனேயே அரசைவிட்டு வெளியேற்றப்பட்டனர். மோமோரியா கிளர்ச்சியை அடக்க உதவிய கேப்டன் வெல்ஷின் தலையீட்டால் சுவர்க்கதேவ் கௌரிநாத் சிங்காவின் காலத்திலிருந்து வியாபாரத் தேவைகளின் பேரில் வெளி நாட்டினருக்கு எதிரான கடுமையான விதிமுறைகள் எவ்வாறு தளர்த்தப்பட்டிருந்தன என்பதையும் ஆசிரியர் விவரிக்கிறார். அப்போதிலிருந்து அரசின் கதவுகள் வெளிநாட்டினர் நுழையும் வகையில் திறந்து விடப்பட்டன என்றும் அஸ்ஸாம் கொஞ்சம் கொஞ்சமாக பொருளாதார விடுதலையையும் சிலகாலஞ்சென்று அரசியல் விடுதலையையும் இழக்கத் தொடங்கியதென்றும் வாதிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தொடர்பின் தொடக்க நாட்களில் மாநிலத்தில் கஞ்சா அறிமுகப்படுத்தப்பட்டு, மக்கள் தொகையின் ஒரு பெரும்பகுதி இந்தப் போதைக்கு அடிமை ஆயினர். விடுதலைக்குப் பின்னர் கஞ்சா தடை செய்யப்பட்ட காலகட்டத்திலும் கூட இதன் அழிவு தரும் விளைவுகள் தெளிவாகத் தெரிந்தன.

நம் எழுத்தாளரால் மேற்கோள்காட்டப்பட்ட மற்றொரு வரலாற்றாசிரியர் டாக்டர் டபிள்யு. நாசோலீஸ். எல்.எல்.டி. ஆவார். அவர் 1863ல் கீழ்வருமாறு எழுதினார்.

"நான் இதே தகுதியில் [தனி மனிதர்] அஸ்ஸாமிலிருந்த என் மலைத்தோட்டத்துக்கு வருகை புரிந்தேன்............ கிராமத் தலைவர்களில் ஒருவர்கூட மரியாதை நிமித்தமாகவோ என்னை வரவேற்கவோ வந்திடவில்லை. கிராமவாசிகள் ஒரு கோப்பை பாலைக்கூட தருவதற்கு மட்டுமன்றி விற்பனைக்குக்கூட அளிக்க உறுதியாக மறுத்தனர். நான் என் மலைத்தோட்டத்தில் தங்கியிருந்த எஞ்சிய சில நாட்களுக்குப், பெருமளவு சிரமத்திற்குப்பின், வாழ்வதற்குத் தேவையான அரிசி, பால், முட்டை, கோழிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்தேன்.

மற்றொரு ஆங்கிலேயரான சாமுவேல் பாய்ஸ்டனின் கருத்தும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அது வருமாறு:

ஒரு சிறு பகுதியினர் முஸ்லிம்களாக இருந்த போதிலும், அஸ்ஸாமின் மக்கள் தொகையின் பெரும்பாலான விழுக்காட்டினர் இந்துக்கள். இந்த இனம் ஒருவகையில் பெருமிதம் மிக்கவர்களாக குறிப்பாக ஐரோப்பியருடனான அணுகுமுறையின் போக்கில் அவ்வாறான விதத்தில் இருந்தனர். பிரிட்டிஷாரால் போர் வெற்றியால் எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதியாக இல்லாமல், பர்மியரிடமிருந்து இணைக்கப்பட்டதாக அஸ்ஸாம் இருந்ததுதான் இதற்குக் காரணம் எனக் காட்டலாம்.

அஸ்ஸாமின் பழம்பெருமை பேணுதர் சர்மாவின் நெஞ்சார்ந்த பாசத்திற்குரியது என்பதால் அதனை உலகின் முன் போற்றிக்காட்டும் எந்த ஒரு வாய்ப்பையும் தவறாமல் பின்பற்றினார். கிட்டத்தட்ட அவருடைய எல்லா வரலாற்றுப் படைப்புகளும் இந்த உணர்வின் எழுச்சி மிளிரவே விளங்கின. அந்தக் கட்டுரையைக் கீழ்வரும் கணிப்புகளுடன் ஆசிரியர் நிறைவு செய்கிறார் :

"வெளிநாட்டினரை அச்சுறுத்துவது அஸ்ஸாமியரின் இரத்தத்தில் ஊறியதாகும். அஸ்ஸாமிய வாழ்வு மற்றும் பண்பாட்டுடன் தம்மை ஒருங்கிணைத்துக் கொள்ளும் ஆர்வமிக்க வெளியாரிடம் அவர்கள் காட்டும் அன்பும் அரவணைப்பும் அவ்வாறேதான். வலுக்குறைந்தது வலிமைமிக்கதன் தாளின் முன் பணிந்து வீழும். தீப்பந்தத்தின் முன் விளக்கு ஒளி மங்கிப் பெருமையிழக்கும். தாழ்ந்த ஒன்று உயர்ந்த ஒன்றின் நிழலினால் மறைக்கப்படும். ஒருகாலத்தில் அஸ்ஸாமிய மக்கள் பிறரைப் பணியவைத்தனர். மற்றவர்களின் விளக்குகளைத்தம் தீப்பந்தத்தின் ஒளிச்சுடரால் வெளிரவும் மங்கவும் செய்துவிட்டனர். ஒரு காலத்தில் பிற இனத்தாரின் ஆன்மச் சிறப்பு அஸ்ஸாமியரின் ஆன்மச் சிறப்பில் தன்னை இழந்தது. எங்கே சென்றது அந்தக் காலகட்டம்? பாழ் வெளியே, அந்தப் பொன்னான நாட்கள் எங்கே சென்றதெனக் கூறுவாயா? எதிரொலி இதனைக் கேட்கிறது. வரலாற்றுச் சுவடிகள் கேட்டன. நாட்டுப்பற்றின் தவிப்பு கேட்டது. வெளிநாட்டினரை அஸ்ஸாமியர் அடிப்படுத்திய அந்த நாட்கள் எப்போதேனும் திரும்பி வருமா?"

"ரோங்கிலி குன்வாரி" என்பது அப்பெயருடைய வரலாற்றுச் சிறப்புள்ள பெண்மணியின் வாழ்க்கை வரலாறு. அவர் பர்மிய மன்னருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பெற்றுப் பின்னர் அஸ்ஸாமின் மேல் படையெடுக்க பாடன் பார்புக்கானுக்கு

பர்மியப்படையின் ஒரு பகுதியைப் பெற உதவி செய்து அஸ்ஸாம் வரலாற்றில் மிக இன்றியமையாத ஒரு பங்கு பற்றியவர். பர்மியத் தலைநகரில் முதலில் அவர் காலெடுத்து வைக்கும்போது ரோங்கிலிக்குக் கிடைத்த வரவேற்பு பற்றிய வருணனை விரிவாகவும் விவரங்களின் களஞ்சியமாகவும் விளங்குகிறது. திறனாய்வாளர்களைப் பொறுத்தவரையில் ரோங்கிலியின் வாழ்வு, மிகச்சாதாரணமாகத் தோன்றுகிற பெண்களின் கரங்கள் வரலாற்றின் திருப்பங்களை உருவாக்கியதற்கான மற்றொரு சான்றாகத் தோன்றுகின்றது.

"யார் துரோகி? பாடானா, பூர்ணானந்தாவா?" என்னும் கட்டுரை மாறுபட்ட கண்ணோட்டமுள்ளது. ஏனெனில், அது அஸ்ஸாமில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட படையெடுப்புக்களுக்கு பாடன்பார்புக்கான் காரணம் என்னும் பெருவாரியான நம்பிக்கையை மறுத்துரைக்கிறது. அறிவுத் திறமும் தொலைநோக்கும் வாய்ந்த அமைச்சராகப் போற்றப்படும் பூர்ணானந்தாவின்மேல் படையெடுப்புக்குக் காரணமானவர் என்று குற்றம் சுமத்துகிறது. முதலில் வெளியானபோது இக்கட்டுரை வாசகர் மத்தியில் பரபரப்பைத் தோற்றுவித்தது.

ஓர் அரசின் வீழ்ச்சி ஆட்சியாளரின் தற்பெருமையாலும் நெறி திரிந்த போக்கினாலும் ஏற்படுகிறது என்னும் கருத்துக் கணிப்புடன் ஆசிரியர் கட்டுரையைத் தொடங்குகிறார்.

வலிமைமிக்க அஹோம் ஆட்சி பர்மியராலும் பின்னர் பிரிட்டிஷாராலும் அடிபணிய வைக்கப்பட்டதற்கு, பூர்ணானந்தா மற்றும் பாதன் சந்திரா இருவருக்கும் இடையேயான அதிகாரப் போட்டியே காரணம் என இவர் அடித்துக் கூறுகிறார். வரலாற்றிலிருந்து தொடுக்கப்பெற்ற பல்வேறு நிகழ்ச்சிச் சூழல்கள் இடைவர இது நுண்ணோக்கமைந்த வரலாற்றுத் தொகுப்பாக விளங்குகிறது.

மீதியிருக்கும் கட்டுரைகளில் அஸ்ஸாமில் முதல் இந்திய விடுதலைப் போரில் அஸ்ஸாம், கச்சாரிகளின் வீரத் தலைவரான துலாராம், மணிபுரி தளபதி இளவரசர் திரிகேந்திரஜித் சின்ஹா ஆகியன அனைத்தும் வரலாற்றைப் பற்றியன. அஸ்ஸாம் வரலாற்றினை வெளிமுகப்படுத்தும் விவரங்கள் நிறைந்து

திகழ்கின்றன. ஒருசில மற்ற கட்டுரைகளும் வரலாற்று மதிப்பு வாய்ந்தவை. "அருணோதோய்". மற்றும் அருஞ்சொற்களைப் பற்றிய கட்டுரைகளை இலக்கியம் எனவும் வகைப்படுத்தலாம்.

ஒவ்வொரு கட்டுரையும் மனம் கவரும் வாசிப்புத் தன்மை உடையது. ஆசிரியர் தம் கருத்துகளை ஒருங்கமைத்து அதன் மூலம் தம் வாதத்தைக் கட்டியமைத்திருக்கும் முறை சிந்தனைத் தெளிவையும் கண்ணோட்டச் சிறப்பையும் காட்டுகிறது.

தக்சிண்பாத் சாத்ரா [1966] என்பது 1662ல் அஹோம் அரசர் ஐயத்வஜசிங்காவின் ஆணைப்படி நிறுவப்பட்ட, அஸ்ஸாமின் நான்கு தலைமை மத வழிபாட்டு மடங்களில் ஒன்றான தக்சிண்பாத் சாத்ராவின் வரலாற்றைத் தொகுத்து பேணுதர் சர்மா இயற்றிய அரும்பெரும் நூலாகும். பிரம்மபுத்திரா ஆற்றின் மேற்பகுதியில் உலகிலேயே பெரிய ஆற்றிடைத் தீவான மஜுலியில் இம்மடம் அமைந்துள்ளது. தற்போது அரசு நிர்வாகத் துணைக்கோட்டமாக அமைந்து அஸ்ஸாம் மேற்பகுதியிலுள்ள ஜோர்ஹட் மாவட்டத்திலுள்ளது. இந்தப் படைப்பானது பல ஆண்டுகளுக்கு மேலான சிரமமிக்க ஆராய்ச்சியின் பயன் ஆகும். ஆசிரியர் தம் கட்டுரைக்கான சான்றுகளை பல்வேறு மூலங்களிலிருந்து, பழம் வரலாறுகள், வைஷ்ணவ குருக்களின் வாழ்க்கை வரலாறுகளான 'சரித் புத்திகள், அஸ்ஸாமின் பண்டை இலக்கியம், புனித நூல்கள், புராணங்கள், நிலமானிய ஆவணங்கள், செப்பேடுகள், அரசப் பிரகடனங்கள், அரசு அலுவல் ஆவணங்கள், மாவட்ட அரசிதழ்கள், இலக்கிய ஏடுகள், விவரமறிந்த தனியாரிடமிருந்து பெற்ற தனிச் செய்திகள், போன்றவற்றிலிருந்து பெற்றார். அறிவுத் திறம் வாய்ந்த இதனைப் போன்ற நூல் கிடைத்தற்கரியது. அஸ்ஸாம் மொழியில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள பிற மொழிகளிலும் காணற்கரிய நூல் இது.

சாத்ரா பற்றிய மிகவிரிவான இந்தக் கட்டுரை மூன்று பகுதிகளும் இணைப்புகளுமாக அமைந்துள்ளது. சாத்ராவின் தற்போதைய இடம், 'தக்சிண்பாத்' என்னும் பெயரின் முதன்மை, சாத்ராவின் பண்புகள், ஒரு நிறுவனம் என்னும் முறையில் அதன் அமைப்பு முறை, அதன் மத ரீதியான மற்றும் பொது நிர்வாகம் பற்றிய விதி முறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள், பல்வேறு வகையான சடங்குகள் மற்றும் வழிபாடுகள், காலஞ் சென்ற சாத்ரா பீடாதிபதிகளின் ஆண்டு

நினைவு நாட்கள், ராஸ் மற்றும் ஹோலி போன்ற பல விழாக்களைக் கொண்டாடும் முறை, தேவி லட்சுமியை வழிபடும் முறை, அஸ்ஸாமின் பல பகுதிகளிலும் சிதறிப் பரவியுள்ள சாத்ராவின் கிளைகள், அவற்றின் வருவாய் மூலங்கள் அதன் 'சேவக்' குகள் [சீடர்கள்], அவர்களின் பிரிவுகள், பணிகள் மற்றும் நுண்ணிய விவரங்கள் பற்றி ஆசிரியர் விவரித்துள்ளார்.

சாத்ராவின் நிறுவனர் தவத்திரு வனமாலி தேவாவின் வாழ்வும் ஆன்மீக சக்திகளும் பற்றிய நெடிய விவரக் குறிப்பும், அவரது குரு பீடத்தில் தொடர்ந்து வந்த 14 பேரைப் பற்றிய விவரங்களும் படைப்பின் மூன்றாம் பகுதியில் அளிக்கப்பட்டுள்ளன. படைப்பில் புனிதத் துறவிகள் 39 பேரின் படங்களும் பக்திக்கலை மற்றும் வழிபாடு பற்றிய காட்சிச் சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன.

"தக்சிண்பாத் சாத்ரா" என்பது வைணவ மதம் மற்றும் பண்பாட்டின் மையங்களைப் பற்றிய சலிப்பூட்டும் பதிவேடாக நில்லாமல் அதனினும் மேற்சென்று விளங்குகிறது. ஒரு விதத்தில் அது வரலாறும் இலக்கியமும் பின்னிப் பிணைந்த ஒன்றாக விளங்குகிறது. சாத்ரா நிறுவப்பட்டதற்கான சூழ்நிலைகள் விளக்கப்படும் போது, தேவையான விதத்தில் அக்காலத்திய அரசியல் வரலாற்றில் பெரும் பகுதியும் தரப்பட்டுள்ளது. இந்தப் படைப்பு அஸ்ஸாமின் வைணவ ஆய்வுகளுக்கு ஒரு முதன்மையான பங்களிப்பு எனக் கணிக்கப்பட வேண்டியதாகும்.

15 சாத்ராதிகர்கள் [சாத்ராவின் தலைமைப் பீடத்தினர்] பற்றிய தொகுப்பு வாழ்க்கை வரலாறுகளாக அமைகின்றது. குட்டிக் கதைகள், பொதுவான நம்பிக்கைகள், மூடப்பழக்கங்கள் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு கலந்து அவை சுவையூட்டப் பெற்றதால் படிக்க மிக உகந்ததாய் விளங்குகிறது. ஆசிரியர், சாத்ராவின் சாத்ராதிகர்களின் ஆன்மீக வாழ்வைத் தெளிவுறத் தந்துள்ளார். அதனை அவர் கையாண்ட விதம் ஆழ்ந்த மரியாதை நிறைந்து விளங்குகிறது. முழுமையாகப் பார்க்கையில், இந்த நிகழ்ச்சித் தொகுப்புகள் அக்கால மக்களின் சமயக் கண்ணோட்டம் பற்றிய விவரத் தெளிவை அளிக்கின்றன. இவை அனைத்திலும் குறிப்பாக சாத்ராவின் இட அமைப்பு [பக்கங்கள் 1—4] பற்றிய வருணனையில் ஆசிரியர் தமது தெளிவான அலங்காரமற்ற வருணனை மிளிர்கிற நடையையும் ஆங்காங்கே கவிதை நயம்

இணைவதையும் தெளிவாகக் காட்டுகிறார்.

அவரது மற்ற நூல்களில் வெளித் தெரியாத ஆழ்ந்த ஆன்மீக ஞானத்தைக் காட்டுவதால் முன்னுரைக் குறிப்புகள் பயன்மிக்கவையாக விளங்குகின்றன.

இந்த நூலைப் படிப்பது ஓர் ஆழ்ந்த அனுபவம். அஸ்ஸாமிய வைணவப் பண்பாட்டின் உட்கிடக்கைகளில் நுழைந்து திரும்புவது போன்றது இது. அதன் முக்கியமான பண்பாட்டுப் பதிவேடாகவும் இது பொன்னெனப் போற்றப்படும்.

# 6

## நினைவுக் குறிப்புகளும் தன்வரலாறும்

கோங்ரசார் கன்சியாலி ரோடாட் [காங்கிரசின் ஒளிச் சிதறலில், 1959] என்னும் நூல் 1921—ல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் அஸ்ஸாம் மக்கள் பெருவாரியாகப் பங்குகொண்டது பற்றிய துடிப்பான, உணர்வு பூர்வமான நிகழ்ச்சித் தொகுப்பாகும்.

அந்த வரலாற்றுச் சிறப்புடைய நாட்களில் அஸ்ஸாமில் இந்திய தேசிய காங்கிரஸின் செயற்பாடுகள் எவ்வாறிருந்தன என்று விளக்கும் வரலாற்று நூலல்ல அது. ஆனால் நாட்டின் அறை கூவலை ஏற்றுத் துடித்தெழுந்த பெருவாரியான பொதுமக்களின், குறிப்பாக கிராமப் பகுதியினரின் செயல்களைப் பற்றிய விரிவான விளக்கமாகவே அது அமைந்துள்ளது. ஒரு சில பகுதியினரின் எதிர்ப்பும், வியக்கத்தக்க அளவில் கூறப்பட்டுள்ளது. ஒரே வரியில் சுருங்கச் சொன்னால், மகாத்மா காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை ஆகியவற்றின் மந்திரவசியம் போன்ற செல்வாக்கு உணர்ச்சித்துடிப்புடன் இந்நூலில் சொல்லப்படுகிறது. இவற்றில், சுருக்கமான எளிய பதிவேடுகளாக, செல்வமும் புகழும் அடைந்தறியாத, ஆனால் தங்கள் நாட்டுக்காக ஆற்றிய தீரமிகு செயல்களாலும் தியாகத்தாலும் வாசகர்களின் மனத்திலே பசுமை நிறைந்த நினைவுகளாய் நின்று நிலவும் நல்லோரது வரலாறுகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

சேரிங் நகரத்தைப் போலவே நாட்டின் பல பகுதிகளிலும் இலட்சோப லட்சம் மக்கள் துணிச்சலோடும் நெஞ்சுறுதியோடும் கிளர்ந்தெழுந்திராவிட்டால் 1947 ஆம் ஆண்டு நாம் பெற்ற விடுதலை இன்னும் எட்டாக் கனவாகவே இருந்திருக்கும் என ஆசிரியர் சரியாகக் கணித்துரைக்கிறார். ஆசிரியரின் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூல் தன் வரலாறு என்று அழைக்கப்பட முழுக்கப்பொருந்தாது எனினும் நினைவுக் குறிப்புகள் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

தனிமனித மற்றும் சமூக முதன்மை பெற்ற ஆவணம் என்னும் வகையில் குறிப்பிடத்தக்க இந்நூல் இலக்கிய வளம் செறிந்து விளங்கி அஸ்ஸாம் மொழிக்கான சாகித்திய அக்காதெமி விருதினை 1960ல் பெற்றது. நூலின் ஒரு பெரும் பகுதி ஆசிரியரின் மறைவுக்குப் பின் வெளியிடப் பெற்ற அவரது தன் வரலாற்று நூலான "மஜியார் பரா மெஜொலோய்" [கிராமத்திலிருந்து மாநகரம் வரை] நூலில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.

மஜியார் பரா மெஜொலோய் பேணுதர்சர்மாவின் வாழ்வு நிகழ்ச்சிகளைக் குழந்தைப்பருவம் முதல் அவர் கிராம வீட்டினை விட்டு குவாஹாத்தி நகரில் வசிக்கத் தொடங்கிய 1950 வரை தொகுத்தளிக்கிறது. அவ்வகையில் இது முடிவு பெறா நூலாகும். ஏனெனில் அவரது வாழ்வின் கடைசி முப்பது ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளும் ஆற்றிய பணிகளும் பற்றி நூல் எதுவும் கூறவில்லை. ஆனால் இந்தக் கால கட்டத்தில் தான் அவரது பெரும்பாலான படைப்புகள் எழுதப்பட்டன மற்றும் வெளியிடப்பட்டன. தாம் குவாஹாத்தியில் வாழ்ந்த ஆண்டுகள் பற்றிய குறிப்புகளைச் சேர்த்திருந்தால், நவீன அஸ்ஸாமிய இலக்கியம் பற்றியும் அவரைச் சூழ்ந்திருந்த எழுத்தாளர்களின் வாழ்வைப் பற்றியும் மதிப்பு மிக்க கண்ணோட்டம் கிடைத்திருக்கும்.

இந்தத் தன் வரலாறு பன்னிரண்டு பர்வங்களாக [ஒரு வகைக் காப்பியப் பரிமாணத்தைக் கோடிட்டு காட்டுவதுபோல்] பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பர்வமும் பல இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மஜியார் பரா மெஜோலோய்

அஸ்ஸாமிய மொழியில் தன்வரலாற்று வகையில் மேன்மையான படைப்பாகிய லட்சுமிநாத் பேஸ்பருவாவின் புகழ் மிக்க தன்வரலாறான மோன் ஜீவோன் சன்வாருன் [என் வாழ்வின் நினைவுக் குறிப்புகள்] நூலுடன் ஒத்த வகையில் தகுதிமிக்க இடத்தைப் பெறுகிறது இந்நூல். இது தன்வரலாறும் நினைவுக் குறிப்புகளும் இணைந்த ஒன்றாக விளங்குகிறது. இந்த நூல் ஆசிரியரின் சொந்த ஆளுமை வளர்ச்சியை மட்டுமின்றி அஸ்ஸாமின் சமூக மற்றும் அரசியல் வரலாற்றின் அரை நூற்றாண்டுக் கால வளர்ச்சிப் போக்கையும் நாம் அறிந்து கொள்ள உதவுகிறது. எழுத்தாளரின் பிறப்பு, பெற்றோர், குல முறை மற்றும் சேரிங் கிராமத்து வீட்டில் அவரது குழந்தைப் பருவம் பற்றிய

விரிவான விவரத் தொகுப்புடன் நூல் தொடங்குகிறது. பின்னர், குடும்ப நினைவுக் குறிப்புகள், சிப்சாகர் நகரத்தில் பள்ளி நாட்கள், கல்கத்தா சென்று பங்கபாசி கல்லூரியில் சேரும் முன் ஜோர்ஹாட் நகரில் குறுகிய காலப் பள்ளி ஆசிரியப்பணி, 1921 மற்றும் 1930 ஒத்துழையாமை இயக்கத்தில் அவரது ஊக்கமிக்க பங்களிப்பு, வேட் எழுதிய அஸ்ஸாம் பற்றிய தொகுப்புரை மற்றும் மணிராம் திவான் ஆகிய நூல்களை வெளியிடல், யானைபிடிக்கும் குத்தகைப் பணியில் ஒரு குத்தகையாளருடன் கூட்டாளியாக இருந்தது, தேசிய போர் முன்னணியில் பணியாற்றிய குறுகிய காலம், உழவர்களை அமைப்பு ரீதியாக [ரயத் சபாக்கள்] ஒருங்கிணைத்ததில் அவரது பங்கு, பல கிராமப் பகுதி முன்னேற்றத் திட்டங்களை அவர் தொடங்கிவைத்தமை, மணிராம் திவானின் நினைவு நாளை ஆண்டுதோறும் கொண்டாடியது, போன்ற பல செய்திகளைத் தொகுத்துரைத்துள்ளார். இவற்றுக்கு இடையிடையே, 20ம் நூற்றாண்டின் முற்பாதியில் பெருவாரியாக விவசாயச் சமுதாயமாக இருந்த அஸ்ஸாம் மக்களின் சமயம் மற்றும் பண்பாட்டு வாழ்க்கை முறைகள் பற்றிய பல்வேறு செய்தித் தொகுப்புகள், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிப்சாகர் நகரத்தின் பழைய கால அரசியல் மற்றும் அதன் உயர்நிலை மக்கள், அது போலவே இன்று வரை பாரம்பரிய அஸ்ஸாம் பண்பாட்டின் மையமாகக் கருதப்படும் ஜோர்ஹாட் பற்றிய தொகுப்புரை ஆகியன கூறப்பட்டுள்ளன. நூலாசிரியரின் ஜோர்ஹாட் சிறை அனுபவங்கள், யானைகளைப் பிடிக்கும் பணியில் காட்டுப் பகுதிகளில் பெற்ற அனுபவங்கள் பற்றிய கவர்ந்திழுக்கும் செய்திகள் உள்ளன. காலனி ஆட்சியாளர்களின் தூண்டுகையால் அஸ்ஸாமிய மக்களில் ஒரு பெரும் பகுதியினர் கஞ்சா அடிமைகளாகிய ஆபத்தான பழக்கத்தைப் பற்றிய விவரக் குறிப்புகளும் கூறப்பட்டுள்ளன.

நூலின் தலைப்பும் முதன்மை வாய்ந்ததாகும். பழமைப் பிடிப்பில் இருந்த கிராமியக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஓர் இளஞ்சிறுவன் மதச் சார்பற்ற பண்பாடும் நவீன வாழ்வின் அடிப்படை ஒழுங்குகளும் அமைந்த உலகப் போக்கை ஏற்று உருவாக்கியதைத் தலைப்பு குறிப்பிடுகின்றது.

இந்த இடத்துக்குப் பொருத்தமாக எச். ஜி. வெல்ஸ் தமது ‘தன்

வரலாற்றில் சோதனை'யில் குறிப்பிட்டுள்ள கருத்துரையை நினைவு கூறலாம்.

இந்தத் தன் வரலாறு அடிப்படையில் ஒரு மனத்தின் ஆர்வங்களும் செயற்பாடுகளும், குறுகிய கட்டுக் கோப்புக்குள்ளான வாழ்வு முறையிலிருந்து, விரிந்து விரிந்து, பரவலாகும் எண்ணப் போக்கினையும் அதன் விளைவாய் நெடிதோங்கும் இலட்சிய வீச்சினையும் அடையும் முறையில் உருவாவதாகும். நான் என் வீட்டுப் புறக்கடையிலிருந்து மாநகரம் செல்கிறேன், அட்லாஸ் வீட்டிலிருந்து மாபெரும் அட்லாஸின் பெருஞ்சுமையை நோக்கி ..............

இந்த வாழ்க்கை வரலாற்றின் ஆசிரியர், கல்கத்தா தமக்கு உலகை அறிவித்த ஜன்னலாக விளங்கியதை ஒத்துக் கொண்டுள்ளார். அங்கு அவர் கல்வி கற்கச் சென்றிருக்கா விட்டால் ஒரு கிணற்றுத் தவளை போலாகியிருப்பார் என்பதனையும் ஒத்துக் கொண்டுள்ளார். பிரபலமற்ற ஒரு சேரிங் நகரத்துக் குழந்தை அஸ்ஸாமின் புகழ்மிக்க மாமனிதராகிய முழுமையான வாழ்க்கைப் போக்கை வாசகருக்கு உண்மை வடிவில் எடுத்துக் காட்டுவதில் நூலாசிரியர் வெற்றி கண்டுள்ளார்.

இந்தத் தன் வரலாற்றின் சிறப்பான கவர்ச்சி, விடுதலைத் தீ கனன்ற நெஞ்சங்களுடன் போராடிய பல ஆண்களும் பெண்களும் [ஆண்கள் பெண்களைக் காட்டிலும் அதிகம்] பற்றிய எண்ணற்ற சிறிய எளிய நிகழ்ச்சிகளின் தொகுப்புகளாகும்.

அவர்களுள் அவருடைய சக கிராமவாசிகள், உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உடனிருந்தவர்கள், அஸ்ஸாமியர் மற்றும் வங்க அரசியல்வாதிகள், பெரும்பாலான எண்ணிக்கையில் வருகிற அவருடன் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட தோழர்கள், ஆகியோர் அடங்குவர். நூலாசிரியருக்கு நன்கு நெருக்கமாகத் தெரிந்த, உணர்வும் உடலுமாய் இயக்கம் செறிந்த, ரத்தமும் சதையுமாய் மானுடம் துள்ளுகிற மனிதர்களைப் பற்றிய கருத்துரைகள் உயிரோட்டத்துடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அவருக்கேயுரிய தனித்த, மொழி நடையில், எடுத்துக் கொண்ட பாத்திரத்தின் அந்தரங்க இயல்பைத் துலக்கிக் காட்டும் வகையில்

விவரங்களைத் தரும் வியக்கத்தக்க கலையம்சம், வாசகரது மனத்தில் ஒத்துணர்வைத் தூண்டுவதில் வெற்றிபெற்றுள்ளது. அஸ்ஸாமில் ஆங்கிலக் கல்வியின் முன்னோடியான, மறைந்த கோவிந்தசந்திர பேஸ்பருவா பற்றிய நீண்ட குறிப்புரை மற்றவற்றைக் காட்டிலும் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. இப்பகுதி இயல்பான நகைச்சுவையும் அறிவு நலமும் உயிரோட்டமும் கொண்டது; ஆற்றொழுக்கான ஓட்டத்துடன் தரப்பட்ட கலைவடிவமாக இவ்வாழ்க்கை வரலாறு விளங்குகிறது. அதன் நல்விளைவாய், பேசப்படும் பொருள் முடிவில் ஒரு கதாபாத்திரமாக உருவாகி வாசகரின் மனத்தில் நிலைத்த இடத்தைப் பிடித்துவிடுகிறது.

அவர் வழங்கும் அனைத்துப் பாத்திரப்படைப்புகளிலும், அவர் அவர்களது உயர் பண்புகளைப் பாராட்டுவார். ஆனால் யாரையும் கண்டித்துக் குறை கூறவில்லை. அவருடைய குறிப்புரைகள் எப்போதும் நடுநிலையாகவே இருக்கும். ஒரு சார்புடையதாக இருந்த தில்லை. கடையரிடத்தும் எளியோரிடத்தும் கூட, களங்கமின்மை, தூய்மை, தன்னையே அளிக்கும் தியாகம் போன்ற பளிச்சிடும் நற்பண்புகள் பலபடித்தாக உறைந்துநிற்கும் என்றும் உண்மையை மனமார அங்கீகரித்தார். இடையிடையே சில நிகழ்ச்சிகளை நாடக பாணியில் அமைத்ததன் மூலம் இவ்வரலாற்றுக் குறிப்புகள் உயிர்ப் புடையதாக மலர்ந்தன. மேலும் சில பாத்திரங்களின் வாழ்க்கை வரலாற்றுக்குக் கீழே பழைய நினைவின், ஏக்கங்கள் வருத்தத்துடன் ஓடின. அத்தகைய ஒப்பற்ற மாமனிதர் இன்று நம்மிடையே இல்லையே என்னும் வருத்தத்தை நூலாசிரியர் தெரிவிக்கிறார்.

நூலாசிரியர் இந்தியர்களை மட்டுமன்றி ஆங்கில ஆட்சியில் உயர் அதிகாரியாகவும் பல்வேறு தேயிலைத் தோட்டங்களின் மேலாளர்களாகவும் பணியாற்றிய ஆங்கிலேயர்களைப் பற்றியும் வரலாற்றுக் குறிப்புகளை வழங்கியுள்ளார். இந்த இடத்திலும் அவரது வருணனை தெளிவும் உயிரோட்டமும் குறையாதிருந்தது. வரலாற்று ஆராய்ச்சியைப் பொறுத்தமட்டிலும் அவர்களில் சிலரிடமிருந்து குறிப்பாக மிடில்டன் இடமிருந்து தாம்பெற்ற உதவியை வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த நூலில் பெருமளவுக்குக் குட்டிக்கதைகள், நினைவுத் துணுக்குகள், அறிவு நயம்மிகும் கருத்துரைகள், வாழ்க்கையையும் நிகழ்வுகளையும் பொறுத்த கூர்மையான கண்ணோட்டம்,

வேடிக்கையான சூழ்நிலைகள், கவர்ந்திழுக்கும் இயற்கைப் புனைவுகள் போன்றவை நிறைந்துள்ளன. இவை அனைத்தும் இதன் இலக்கியமதிப்பை உயர்த்திப் படிப்போர்க்கு மகிழ்வையும் தருகின்றன.

இவ்வாறாக, காந்தியடிகளின் தலைமையில் அவரது அழைப்பை ஏற்று நூற்றுக்கணக்கான மக்கள் தயக்கமற்ற வெளிப்பாட்டுடன் விடுதலைப்போரில் ஈடுபட்டதை வாசகருக்கு 'மஜியார் பரா மெஜோலோய்' உளம்பதிய விளக்குகிறது. விடுதலை இயக்கத்தின் தொடக்க ஆண்டுகளில் அஸ்ஸாமியப் பெண்கள் பங்கேற்றதைப் பற்றிய பயன்மிக்க குறிப்புரையும் நூலில் அமைந்துள்ளது.

சுருக்கமாகக் கூறினால் இந்தத் தன்வரலாறு, ஆங்கிலக் கல்வியின் பயனாய் மெதுவாக ஆனால் உறுதியாக மேற்கத்தியச் செல்வாக்குக்கு உட்படத் தொடங்கி, அதே வேளையில் தன் அடிப்படை உரிமைகளைப் பற்றிய ஆக்கப்பூர்வ விழிப்புணர்வையும் இழந்துவிடாமல் போற்றிய அஸ்ஸாமியச் சமுதாயத்தின் பதிவேடாக இந்த நூற்றாண்டின் முன்னைய ஐம்பதாண்டுக் கால வரலாறாக விளங்குகிறது. அந்தக் கால கட்டத்தின் உணர்வெழுச்சி உள்ளது உள்ளபடியே இங்கே எதிரொலிக்கப்படுகிறது.

ஒரு தன்வரலாற்றைப் பொறுத்த மட்டிலும் அடிப்படையான கேள்வி என்பது அந் நூலின் மூலம் வெளித்தோன்றும் நூலாசிரியரது ஆளுமையின் இயல்பு எத்தன்மையது என்பது தான். அதே அளவு முதன்மை வாய்ந்த மற்றொரு கேள்வி, ஆசிரியர் தமக்கென ஏற்றமைத்துக் கொண்ட குறிப்பிட்ட கண்ணோட்டம் இருப்பின், அவரது மற்ற செயற்பாடுகளை அதற்குப் பொருந்தத் திருத்தி அமைத்திடுவது பற்றியாகும். தற்போது நம்மால் பேசப்படுகிற நூலில், அவரைப் பற்றியே திட்டமிட்டு வடிவம் காட்டப்படுவதோ தனிப்பட்ட ஒரு கண்ணோட்டத்தினைத் தழுவி நிற்பதோ இல்லை. நூலாசிரியரின் வாழ்வை மறு சீரமைத்துக் காட்டும் முயற்சி இங்கில்லை. ஒரு கருத்தில், நூலாசிரியரின் வாழ்க்கை மற்றும் கால கட்டங்களின், நேர்படித்தான எளிய அலங்காரமற்ற தொகுப்புரையே இது. இங்கே அவர் ஊடகமாக இருக்கிறாரேயன்றி தனித்த ஒருவராகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. வாசகர் நூலாசிரியரின் வாழ்க்கை பற்றிய ஆழ்ந்த அறிவை. அவருடைய நோக்கங்கள் மற்றும் தேவைகள் பற்றிய தற்சார்பான ஆய்வைக்

காட்டிலும் வாழ்க்கை உண்மைகளிலிருந்து தெரிந்து கொள்கிறார்.

அஸ்ஸாமிய மக்களுக்காகவும், அவர்தம் இலக்கியத்திற்காகவும், பண்பாட்டிற்காகவும் தம் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட, தேசப்பற்று மிக்க ஒருவரையே வாசகர்கள் இங்கே இனங்கண்டு கொள்கின்றனர். அவரது அனைத்துப் படைப்புகளும் இந்த உயரிய நோக்கம் ஒன்றாலே தான் உணர்வூட்டப் பட்டன. நூலாசிரியரிடத்திலே ஒரு மனிதாபிமானி, செயலாக்கமிக்க பொது அறிவுவாதி மற்றும் மிகைக் கற்பனையின் பகற் கனவிலிருந்து விடுபட்ட மன உறுதியாளர், ஆகியோரையே வாசகர்கள் மேலும் காண்கின்றனர். அவர் தமது கருத்து வெளியீட்டுரிமையை மிக உயர்வாகப் போற்றியவர். கொள்கை கோட்பாடுகளைப் பொறுத்தமட்டில், எந்த விலை ஆயினும் விட்டுக் கொடுக்காதவர். ஒரு தொடராக 20 ஆண்டுக்காலம் நாட்டு விடுதலைப் போரில் முழு ஈடுபாட்டுடன் உழைத்த பின்னர் அவர், கலகக்காரராக மாற விரும்பாததால், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திலிருந்து முற்றிலும் ஒதுங்கி நிற்க முடிவு செய்தார். பிரிட்டிஷாரை வெளியேற்றும் நோக்கத்துக்காக அவர்களது வீடுகளுக்குத் தீ வைக்கும் ஓர் இயக்கத்தில் சேரும் மனிதர் தாம் அல்லரென்று அவர் உறுதிபடக் கருத்து வெளியிட்டார். [பக்கம் 561]

அவர் எப்போதும் அச்சமற்றவராகவும் தம் கருத்தை வலியுறுத்த வல்லவராகவும் தேவையான சமயத்தில் கசப்பான உண்மையைக் கூறத் தயங்காதவராகவும் விளக்கினார். அவரது அறிவு கூர்மையானது; சிந்தனைத் திறமிக்கது. அவர் நுண்ணிய நகைச்சுவை உணர்வு வாய்ந்தவராயிருந்தார்.

பேணுதர் சர்மாவின் உள்ளார்ந்த வாழ்வுணர்வு, எப்படிப் பட்டது? அவர் செயலூக்கமற்ற இலட்சிய வாதி அல்லர்; தீரம் மிக்க போர் வீரர். ஆகவே அத்தன்மையே, பழுத்த நுண்ணறிவும் முடிவெடுக்கும் திறமும் துலங்கும் அவரது வாழ்க்கை நடப்புகளில் எதிரொளித்தது. அவரது ஆளுமையில் அமைதியுடன் ஆழ்ந்து சிந்திக்கும் இயல்பு இல்லை எனக் கூற இயலாது. எனினும் அவரது வாழ்க்கை செயல் வேட்ட வாழ்வாகவே அமைந்தது.

இந்த நூலின் முதன்மையான சிறப்பு இதன் மிக இனிய வாசிப்புத் தன்மை தான். ஒரு கதை போல ஓட்டம் உடையதாக

இருக்கிறது. நீங்கள் அதன் எந்தப் பக்கத்தைத் திறந்தாலும் அத்துடன் ஒன்றி விடுவீர்கள். அதற்குக் காரணம் அந்நூலில் முழுமையாக அளாவி நிற்கும் மனித நல நாட்டமும்; சொல்லுகின்ற முறையும் மொழி நடையுமே எனலாம். "மஜியார் பரா மெஜோலோய்" ஓர் அனுபவக் களஞ்சியம்; அறிவுக் கருவூலம், துடிப்பு மிக்க ஆன்மாவின் வாழ்க்கைக் கதை; காலத்தைக் காட்டி நிற்கும் கண்ணாடி, ஒன்றுடன் ஒன்று பிணைந்து நிற்கும் நெஞ்சத்தை வெளிப்படுத்தும் ஒளி ஆடி.

# 7

# மொழி பெயர்ப்புகள், இலக்கியத்திறனாய்வுகள்

இராபின்சன் குருசோ [1918] என்னும் டெஃபோவின் நாவலை சுருக்கிய மொழி பெயர்ப்பாக ஓட்டமிக்க அஸ்ஸாமிய நடையில் பேணுதர் சர்மாவும் கிரீந்ர சந்திர நாத்தும் இணைந்து மொழி பெயர்த்தனர். அந்த நடையின் தவிர்க்க இயலாத கவர்ச்சியால், இந்த நூல் அஸ்ஸாமிய வாசகர்களில் எல்லாப் பிரிவினரிடமும் மிகமிக நன்கறியப்பட்டதாயிற்று. மற்றொரு நூலான மொங்கலாதிர் காந்திமாலா [1946] ஆர்தர்கானன் டாயிலின் ஐந்து துப்பறியும் கதைகளை மனத்தில் பதியத்தக்க விதத்தில் மொழி பெயர்ப்புச் செய்ததாகும். பிற மொழிகளின் நல்லறிஞர்களது கருத்துக்களையும் கற்பனைச் செல்வங்களையும் கொணர்ந்து தம் இலக்கியத்தை வளப்படுத்துவது ஆசிரியரின் நோக்கமாக இருந்தது. பேணுதர் சர்மா இந்த நூலின் முன்னுரையில், "ஒரு மொழி பெயர்ப்பாளர் தம் மொழியில் முழுமையான அறிவுத்திறம் பெற்றவராயிருக்க வேண்டும்" என்னும் தம் கருத்தைச் சரியாகவே வலியுறுத்திக் கூறியுள்ளார். மூலநூலின் சொற்களுக்கு இணைச் சொற்களை மாற்றியிடுவது மொழி பெயர்ப்பல்ல எனக் கூறுகிறார். மொழிபெயர்ப்பு இலக்கியத் துறையிலும் இவரது ஆற்றலை இவரது சொந்த மொழி பெயர்ப்புகள் மெய்ப்பிக்கின்றன.

பேணுதர் சர்மா, இலக்கியத் திறனாய்வு பற்றிய எந்தத் தனிப்படைப்பையும் விட்டுச் செல்லவில்லை. ஆனால், கதை கூறும் கலை, கதைப்பாடல் வகையின் கவிதைப் பண்புகள், வயது வந்தவர்க்கு எழுதும் முறையினின்றும் மாறுபட்டு குழந்தை இலக்கியம் எழுதும் கலை, லட்சுமிநாத் பேஸ்பருவாவின் இலக்கிய இயல்புக் கூறுகள், நாடறிந்த இலக்கிய இதழ்களின் பங்களிப்பு போன்றவற்றைப் பற்றிப் பல இடங்களிலும் பரவலாகக் கிடக்கிற அவரது கணிப்புகள் அனைத்தையும் காணுகையில் அவரது நுண்மையான திறனாய்வு ஆற்றல் மெய்ப்பிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில், அவர் திறனாய்வு இலக்கியத்துறைக்குத் தம் நேரத்தை ஈடுபடுத்தியிருப்பின் தமது தகுதியை நிருபித்திருப்பாரென அழுத்தமாகக் கூறலாம்.

பேணுதர் சர்மா நகைச்சுவைப் படைப்பிலும் முயன்றதை **சேதாய் சரார் கதா** நூல் சான்றளிக்கிறது.

# 8

## நடைநய வல்லுநர்

பேணுதர் சர்மா ஒப்பற்ற நடைநய வல்லுநராக அஸ்ஸாமியரால் மதிக்கப்படுவது சாலப் பொருத்தமானதே. மரபுத்தொடர் செழுமிய பழகிய எளிய நடையின் மூலம் அஸ்ஸாமிய எழுத்தாளர்களிடையே அவர் தனக்கென ஓர் சிறப்பிடத்தை நிறுவிக் கொண்டுள்ளார். அவருடைய மொழி நடைதான் உண்மையான அஸ்ஸாமிய நடை என்று பலரும் விரும்பிச் சொல்லும் அளவுக்கு அவரது மனங்கவரும் சொல்லாட்சி அமைந்துள்ளது. ஆனால், ஒரு மொழி பெயர்ப்பில் அந்த நடைநயத்தை எடுத்துக்காட்டுவது முடியாத செயல். அந்த நடையமைப்பின் இயல்புக் கூறுகளை மட்டுமே நாம் எடுத்துப்பார்க்கலாம்.

"தத்சமம்" மற்றும் "தற்பவ"ச் சொற்களைச் சிறிதாக்கி மக்கள் வழங்கும் சொந்தச் சொற்கள் மிகப் பெருமளவில் ஓங்கி நிற்பதை அடையாளமாகக் கொண்டது இந்நடை. இதன் சிறப்புகளில் ஒன்று பொருளுக்கேற்ற சொல் அல்லது கருத்தும் சொல்வழக்கும் இனிதாக இணைந்திருப்பதாகும். இது விரைவில் புரிந்துகொள்ள வசதி செய்கிறது. தக்க நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டும் சொல்லமைப்பின் திறமை இதில் உட்பொதிந்துள்ளது. அளவு மிஞ்சிப் பொங்கிடாமல் அதே சமயத்தில் தேவையான நுணுக்கத்துடன் வெளியிட இந்நடையால் முடியும். அஸ்ஸாமிய பண்பாட்டின் வேர்களில் மூலங்கொண்டுள்ள இந்த நடை அஸ்ஸாம் மொழியின் தனித்த அடையாளத்தை தொடர்ந்து நினைவுபடுத்தும். இறுக்கமான தனிப்படுத்தப்பட்ட சொல்லாட்சியே இந்நடையின் கட்டாயத் தேவை என்பதில்லை. மரபுத் தொடர்களுக்கு அப்பாற்பட்ட சொற்களையும் தொடர்களையும் தன் வாக்கிய அமைப்பில் சேர்த்துக்கொள்வதை இந்நடை விலக்குவதில்லை. பேணுதர் சர்மா இந்நடையைக் கையாண்ட முறையை நுணுகி ஆராயும்போது இக்கருத்து நன்கு மெய்ப்பிக்கப்படுகிறது. நுண்ணுணர்வும், அன்றாட உரையாடலைப் பெருமளவுக்கு ஒத்திருத்தலும் இதன் மற்ற

சிறப்புக்கூறுகள். இந்தமொழி நடை எழுத்துத் திறன் மிக்கவர்களுக்கே உகந்தது. அவரது மக்களின் பண்பாட்டு ஒருங்கிணைப்பைப் பற்றிய முழுமையான அறிவு நிறைந்திராதவருடைய கையில் இந்நடை சிதைந்து உருளும்.

பேணுதர் சர்மா, தம் நோக்கத்துக்கேற்ற முறையில் நடையில் மாற்றங்களைச் செய்து கொள்வதில் வல்லவராயிருந்தார். அவர் படபடப்பற்ற, ஒழுங்கான, நுட்பமான நடையிலும் எழுதிவந்தார். இவ்வகைப்பட்ட வருணனை நடையை அவர் பெரும்பாலும் வரலாற்றுப் படைப்புகளுக்குப் பயன்படுத்தினார். உணர்ச்சி ததும்பிடும் நடையும் அவருக்கு அப்பாற்பட்டதன்று. ஆயினும் ஓர் எழுத்தாளரின் பலவகை நடைகளும் கலந்து பட்டே இயைகின்றன. அவற்றின் மூலக்கூறுகளை எளிதில் பிரித்துவிட இயலாது.

எந்தவகை நடையில் எழுதும்போதும் "நடை, மனிதனின் இயற்கை இயல்பு" என்னும் பஃபன் அவர்களின் பொன்மொழியின் அறிவு நலத்தை பேணுதர் சர்மா நிரூபித்தார்.

# 9

# நிறைவுரை

பேணுதர் சர்மா பழமைக்கும் தற்காலத்துக்கும் இடையே மதிப்புமிக்க இணைப்பாக விளங்குகிறார் என்று கூறுவது மிகச் சரியானதாகும். அஸ்ஸாமின் பழம் பாரம்பரியப் பெருமை மீது பெரும் அன்பு பூண்டிருந்த அவர், பழமையின் அடிப்படையில்தான் தற்காலச் சிறப்பை முறையாக உருவாக்க முடியும் என உளப்பூர்வமாக நம்பினார். பழமையின் வேர்களிலிருந்து நம்மை வெட்டித் தனிப்படுத்திக் கொள்வது நம் தற்போதைய வாழ்வையே நிலைகுலைத்துவிடும் என எண்ணினார். அதனால்தான் அவர் பழமையின்மேல் மதிப்பு வைத்திருந்தார். ஆனால் அது அவரை ஒரு குறுகிய பிரிவினைவாதியாகக் குறைத்துவிடவில்லை. கால மாறுதல்களுக்கேற்ற பல மாற்றங்களை அவர் வரவேற்றார். தனிப்பட்ட வாழ்விலும் பழக்க வழக்கங்களிலும் அவர் எல்லாவித பழமைவாதக் குறுகிய கண்ணோட்டத்திலிருந்தும் விலகி உயர்ந்திருந்தார். மனிதாபிமானமே அவர் நம்பிய மதம். அவ்வாறாகவே அவர் அடிப்படையில் மனிதாபிமானவாதியாக விளங்கினார். கூர்நோக்குள்ள எந்த வாசகரும் அவருடைய படைப்புக்களில் இந்தக் கருத்தோட்டத்தைக் காணத் தவறமாட்டார்.

1922 இல் அரசியல் கைதியாக சிப்சாகரில் இருந்த பேணுதர் சர்மாவை அன்றைய சிப்சாகர் மாவட்டத் துணை ஆணையர், மாநில ஆணையாளர் திரு ஆல்லெனுக்கு அறிமுகப்படுத்துகையில் இவ்வாறு குறிப்பிட்டார். "அவர் ஒரு பிராமணர் மற்றும் பேராற்றல் மிக்க எழுத்தாளர்". இந்தக் குறிப்பின் பொருத்தம் முழுமையாக நியாயப்படுத்தப்படுகிறது. பேணுதர் சர்மா ஓர் உண்மையான அந்தணருக்கு அமையவேண்டிய ஞானமும் நற்பண்பு துலங்கும் கண்ணோட்டமும் படைத்தவராயிருந்தார். அவரது பேனாவின் வலிமையும் இன்று நன்கு அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. அவரது பல்வேறுவகைப்பட்ட படைப்புகளின் திறத்தாலும் செழுமையினாலும் அவரது பரந்துபட்ட அக்கறையாலும் அஸ்ஸாமிய இலக்கியத்தில் மிக உயர்ந்த நிலையில், லட்சுமிநாத் பேஷ் பருவாவுக்கு அடுத்த இரண்டாம் நிலையில் சிறந்து நிற்கிறார் என்று கூறுவது மிகையாகாது.

# நூற்பட்டியல்

## பேணுதர் சர்மாவின் நூல்கள்

1. குழந்தை இலக்கியம்:
ராங்பாடா [1943]
லாடுமணி [1959]
மரமர் காரேங் [1968]

2. வாழ்க்கை வரலாறு:
கங்கா கோவிந்த புக்கான் [1948]
மணிராம் திவான் [1950]
அர்க்யாவளி [1964]
ஹேம் சந்திர கோஸ்வாமி [1971]

3. பிற உரைநடை நூல்கள்:
டுனோரி [1963]
பூல் சந்தன் [1968]

4. வரலாற்று நூல்கள் :
டாக்டர் வேட் : அக்கவுண்ட் ஆப் அஸ்ஸாம் [அஸ்ஸாம் வரலாறு] [1927] [பதிப்பித்தல்]
சாதாவன் சால் [1947]
தூர்வீன் [1951]
தி ரிபெல்லியன் ஆப் 1857 விஸ் அவிஸ் அஸ்ஸாம் [1957]
தக்சிண்பாத் சாத்ரா [1966]

5. நினைவுக் குறிப்பு
கோங்ரசார் கன்சியாலி ரோடோட் [1959]

6. தன் வரலாறு
மஜியார் பரா மெஜோலோய் [1986]

7. மொழி பெயர்ப்புகள்
ராபின்சன் குருசோ [1918]
மொங்கொலாதிர் காந்தி மாலா [1946]

8. நகைச்சுவைப் படைப்புகள்:
சோதாய் சரார் கதா [1969]

நூல்களின் பக்கத்தில் தரப்பட்டுள்ள ஆண்டுகள் அவை முதலில் வெளியிடப்பட்ட ஆண்டுகளாகும். மேற் குறிப்பிட்ட அனைத்து நூல்களும், அவரது தன் வரலாற்றைத் தவிர, அஸோம்ஜோதி, சுவக்பூர், கௌஹாத்தியால் ஆசிரியரது நேரடி மேற்பார்வையில் வெளியிடப்பட்டன.

தன்வரலாறு, ஆசிரியரது தொகுக்கப்பெற்ற படைப்புகளை நான்கு பெருநூல்களாக வெளியிடும் தொடரில் முதல் நூலாக பேணுதர் சர்மா நினைவு அறக்கட்டளையின் சார்பில் நடுவணரசின் பொருளுதவியுடன் திரு அஜித் குமார் சர்மாவால் வெளியிடப்பட்டது. மற்ற மூன்று பெருநூல்களும் விரைவில் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகின்றன.

## பேணுதர் சர்மாவைப் பற்றி வெளிவந்த படைப்புகள்

1. 'பேணுதர் சர்மா' — உபேந்திர பொற்கொடோகியால் தயாரிக்கப்பட்ட பாராட்டு மலர்.

2. 'ஆமார் பேணுதர்' – நினைவு போற்றும் சிறப்புப் பெருநூல்
பதிப்பாசிரியர் : உபேந்திர பொற் கொடோகி
[அஸோம் ஜோதி, கௌஹாத்தி, 1983]

3. 'பேணுதர் சர்மா' — தீர்த்தநாத் சர்மா [அஸோம் சாகித்யசபா, ஜோர்ஹாட், 1983].

117388
14/12/04
SHIMLA

இலக்கியப் படைப்பாளியாகிய பேணுதர் சர்மா [1894–1981] பல்வேறு துறைகளில் பெருமைபெற்று விளங்கினார். நடை நலம் மிளிரும் எழுத்தாளர், குழந்தை இலக்கியப் படைப்பாளர், கூர்ந்த நோக்குடைய கட்டுரையாளர், வாழ்க்கை வரலாற்றாசிரியர், தன் வரலாற்றாளர், கதாசிரியர், மொழிபெயர்ப்பாளர், தடம் புரளாத பத்திரிகையாளர், மற்றும் நுண்மைமிக்க வரலாற்று ஆராய்ச்சியாளர் எனப் போற்றப்பட்டார். அவரது பலவகைப்பட்ட படைப்புகளின் திறத்தாலும் செழுமையாலும் அவரது பரந்துபட்ட அக்கறையாலும் அஸ்ஸாமிய இலக்கியத்தில் மிக உயர்ந்த நிலையில் லட்சுமிநாத் பேஷ்பருவாவுக்கு அடுத்த இரண்டாம் நிலையில் சிறந்து நிற்கிறார்.

இந்தச் சிறு நூலில் டாக்டர் பிரபுல்லா கொடோகி [பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர்] அவரது வாழ்வின் பல்வேறு கூறுகள், ஆளுமை, இலக்கியப் படைப்புகள் மற்றும் வரலாற்றுப் படைப்புகள் ஆகியனவற்றை விளக்கியுள்ளார். படைப்புகளின் உள்ளடக்கம், வெளிக்கூறும் பாங்கு, இலக்கியம் மற்றும் வரலாற்று ரீதியான மதிப்புகள் பற்றியும் திறனாய்வு முறையில் பகுத்தளிக்கிறார்.

*BENUDHAR SHARMA*
*(Tamil) Rs 15.*

ISBN – 81 – 7201 – 651 – 4

Library IIAS, Shimla
T 891.450 924 Sh 23 K
00117388